நிம்மதியைத் தேடி...

சாட்சி R. நிர்மலா

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* **இலவசமாக (மத்தேயு 10:8)** உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely **free of cost (Matt 10:8)** forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

நிம்மதியைத் தேடி...

ஆர்.நிர்மலா

என்னுரை

நாங்க ஒரு இந்து பிராமண குடும்பத்திலேருந்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏத்துண்டிருக்கோம். எங்களுக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கா. எங்களுக்கு கல்யாணமானதிலேருந்து கிட்டத்தட்ட 10 வருஷங்கள் கண்ணீரும் கஷ்டமுந்தான் அனுபவிச்சோம். என் குடும்பத்தால நான் பட்ட வேதனைகளை சொல்லி முடியாது. எத்தனையோ கோவில்களுக்கு போனேன் பரிகாரத்தை தேடி, சாப விமோசனத்தை தேடி, நிம்மதியைத் தேடி. ஆனா நிலைமை இன்னும் மோசமானதே ஒழிய ஒரு விடிவுகாலமும் வரலை. கடைசியா நான் என் குழந்தைகளோட வாழ்க்கையையே முடிச்சுண்டுடலாம்னு நினைச்சப்பதான் ஆண்டவராகிய இயேசு என்னை காப்பாத்தினார். அவருக்கும் எங்களுக்கும் பிறப்பால சம்பந்தம் கிடையாது. ஆனாலும் வேதப்புஸ்தகத்தல எழுதியிருக்கிறபடி அவரிடத்தில் பட்சபாதம் இல்லை. நாங்க அவரை தேடிப் போகலை. அவரே எங்களை தேடிவந்தார். அதுதான் இயேசு கிறிஸ்துவின் அன்பு. அந்த அன்பை நமக்கு குடுக்கறதுக்காக அவர் தன்னோட உயிரையே பலியா தந்து மூணாவது நாள் உயிரோட எழுந்தார். இன்னிக்கு நாங்க குடும்பமா ரொம்பவும் சந்தோஷமா இருக்கோம்னா அதுக்கு காரணம் இயேசு கிறிஸ்துகிட்ட நான் வேண்டிண்டதுதான்.

அவர் செஞ்ச இந்த மகா பெரிய உபகாரத்தை நாங்க குடும்பமா சபைகளிலேயும் பொதுக்கூட்டங்களிலேயும் சாட்சியா சொல்லிண்டிருக்கோம். இன்னிக்கு நாங்க உயிரோட இருக்கோம்னு சொன்னா அவரோட இரக்கத்தினால மட்டுந்தான். நான் பட்ட கஷ்டங்களை சொன்னாதான் இந்த உலகத்தால கைவிடப்பட்டு யாராலேயும் தீர்க்க முடியாத அவ்வளவு பெரிய பிரச்சனைல இருந்த எங்களை ஆண்டவர் எப்படி மீட்டுண்டு வந்தார்னு உங்களுக்கு புரியும். அதுக்காக தான் இந்த சாட்சியை நான் எழுதறேனே தவிர வேற ஒண்ணும் இல்லை. என்னை மாதிரியே நீங்களும் கஷ்டத்தை அனுபவிக்கிறீங்களா? **உங்களுக்கும் ஒரு வழி இருக்குன்னு** நீங்களும் தெரிஞ்சுக்கறதுக்குதான். எங்களுக்கு அற்புதம் செஞ்ச அதே இயேசு உங்களுக்கும் அற்புதம் செய்வார். தைரியமா இருங்க. நம்ம தலையெழுத்தை மாத்தி எழுத உயிரோட இருக்கிற ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவால மாத்திரமே முடியும். அந்த அன்பை ருசிச்சு பாருங்க. அவரை நம்புங்க. உலகத்தால குடுக்க முடியாத அந்த உண்மையான அன்பு நம்மைப் சொர்க்கம் கொண்டு சேர்க்கும் வரைக்கும் நிலைச்சு நிக்கும்.

15.1.2011
சென்னை44

கிறிஸ்துவின் பணியில்

சகோதரி **ஆர். நிர்மலா**

நூல் மற்றும் சாட்சி DVD கிடைக்கும் முகவரி:

Mr. V. ராஜா
ராஜாவின் ஊழியங்கள்
6. 6வது தெரு,
ரங்கா நகர், குரோம்பேட்டை,
சென்னை - 600 044.
செல்: 98403 68166 99625 18166

Mr. C. சுரேந்திரன்
மல்கியா கேசில் - முதல் மாடி
நெ.52, திருவீதி அம்மன்
கோவில் தெரு, வில்லிவாக்கம்,
சென்னை - 600 049.
செல்: 9444257013

Mr. S. சந்திரசேகர்
51-A/20, மாசிலாமணி நகர்,
மேலபாளையம் போஸ்ட்,
திருநெல்வேலி - 627 005.
செல்: 95510 62235

Mr. E. சாமுவேல்ராஜ்
கிருபை இல்லம்,
102A/15. TCS நகர் விரிவு,
கோட்டபள்ளி போஸ்ட்,
திருச்செங்கோடு,
நாமக்கல் மாவட்டம் - 637214
செல்: 98429 81553

Mr. S. தாயப்பன்
12, ஜி.டி.நாயுடு தெரு,
பாலாஜி அவென்யூ - 1
சிட்லபாக்கம் மெயின் ரோடு,
சென்னை - 600 073.
போன்: 044 -2223 4526.

Mr. A. ஜான் சுந்தர்
100, வி.எம். தெரு,
ராயப்பேட்டை,
சென்னை - 600 014
செல்: 98401 99777.

Mr. N. யாபேஸ் முத்துசெல்வம்
1073/9/4B, மில்லர் புரம்,
தூத்துக்குடி - 628 008
செல்: 94420 53226.

Mr. BSJ. விக்டர்
4/354, அருணாசலம் நகர்,
சென்னமாணிக்கன்பட்டி
திண்டுக்கல் - 625 004.
செல்: 94422 51104.

நிம்மதியைத் தேடி...

கல்யாண வைபோகமே

எங்க வீடு கல்யாணக்களை கட்டி இருந்தது. வீட்டுக்கு முன்னாடி வாழைமரம், மாவிலை தோரணம் எல்லாம் கட்டி, சீரியல் லைட்டெல்லாம் போட்டு அமர்க்களப்பட்டுண்டு இருந்தது. பல ஊரிலேருந்து எங்களோட சொந்தபந்தம் எல்லாம் வந்தாச்சு. வீடு நெறைஞ்சு வழிஞ்சுது. எனக்கு சிலபேரு கூரைப் பொடவை கட்டி விட்டுண்டு இருந்தா. எல்லாரும் ரெடியாயிட்டேளா இல்லையா? என்ன பண்ணிண்டு இருக்கேள்? இங்கேந்து வடபழநி போக வேண்டாமா? இன்னிக்கு முகூர்த்த நாள். நாம டிராபிக்ல மாட்டிக்காம இருக்கணும்னா சீக்கிரம் கிளம்பி னாத்தானே! அப்பா எல்லாரையும் விரட்டிண்டு இருந்தா.

அம்மா அப்பாவை சமாதானப்படுத்திண்டு இருந்தா. இதோ ஆயிடுத்துன்னா. நீங்க கத்தாதேள். உங்களுக்கு BP ஏறிடும். உங்களுக்கென்ன, நீங்கள்ளாம் ஆம்பளைங்க. ஒரு செகண்டுல பஞ்சகச்ச வேஷ்டி கட்டிடுவேள். நாங்க மடிசார் கட்ட வேண்டாமா? இதோ கிளம்பியாச்சு. நீங்க ஒரேயொருவாய் காபி சாப்பிடறேளா? வெறும் வயித்தோட இருக்கேளே? இத்தனை அவசரம் அமர்க்களத்திலேயும் அம்மாவுக்கு அப்பாவின்மேல கரிசனை. அப்பா விஸ்வநாத ஐயர்.

அம்மா லலிதா. அவா ரெண்டுபேருக்குள்ளே அவ்வளோ அன்னியோன்யம்

''லிஸ்ட்' பிரகாரம் எல்லா சாமான்களையும் எடுத்து வச்சிருக்கேளா?'' சரி சீக்கிரம் எல்லாரும் வேன்ல ஏறுங்கோ. நேரம் ஆறது. பொண்ணைக் கூப்பிடுங்கோ, ஆரத்தி எடுத்த மாமி இப்ப கிளம்புங்கோன்னு சொன்னா. கடைசியிலே எல்லாரையும் ஒருவழியா வேன்ல ஏத்தி வடபழநி முருகன் கோவிலுக்கு வேன் கிளம்பிடுத்து.

மாங்கல்யம் தந்துனானேனா

கல்யாணம் ஒரு பொண்ணுக்கு எவ்வளவு சந்தோஷமான ஒரு விஷயம். பல இன்பமான கனவுகள், கற்பனைக் கோட்டைகள், எதிர்பார்ப்புகள்! கொஞ்சம் பயம், இதோ த்தான் நான் அவருக்கு பக்கத்துல உக்காந்துண்டிருந்தேன். கெட்டி மேளம்..... கெட்டி மேளம்... 'மாங்கல்யம் தந்துனானேனா மம ஜீவ நகேதுனா'... 'எய் நிர்மலா... என்னடி, பகல்ல உக்காந்துண்டே அப்படி ஒரு தூக்கம்?' அம்மா என்னை ஒரு உலுக்கு உலுக்கினா. டக்குன்னு முழிச்சுண்டுட்டேன். அடச்சே! இவ்வளவு நேரம் நாம வெறும் கனவுதானா கண்டுண்டிருந்தோம்? எவ்வளவு இனிமையான கனவு. என்னோட கல்யாணம் எப்படியெல்லாம் நடக்கணும்னு நான் கற்பனை பண்ணி இருந்தேனோ அதுதான் எனக்கு இப்போ கனவா வந்திருக்கு. அதுவும் பகல்ல கனவு. •ஆமா இதெல்லாமே என் வாழ்க்கையில ஒரு பகற்கனவுதான்.

[illegible] திருமணம்

[illegible] முதல் [illegible] எனக்கும் அவருக்கும் [illegible] ஆனா எங்க ஏற்பாட்டை பற்றி நானும் [illegible] எங்க வீட்டிலே கல்யாணத்தை [illegible] முடிக்கவேண்டுமே அவசரம். அப்போ நான் எனக்குப் [illegible] இருக்கிற ரெண்டு தங்கைகளையும் ஒண்ணுறு ஒண்ணா [illegible] ஆனா அவர வீட்டிலே அவரோட தங்கைக்கு [illegible] அவருக்கு பண்ணனும்னு சொல்லி கல்யாணத்தை [illegible] சொன்னா. அதுக்கு எங்கப்பா ஒத்துக்கல. அதனால [illegible] எங்க ஏற்பாடுகளையும் பண்ணி, இன்னிலே ஒண்ணும் [illegible] கூட்டிப்போடுபான ஒரு நிலைமை. எங்க [illegible] எல்லாரும் வந்தா. எங்களோடு ஒருத்தரும் வரலை. [illegible] சொன்ன கவாட்டா, கும்மாளம், கலை எதுவுமே இல்லாம [illegible] ஒரு சாதிய நல்லபடியாலே எங்க கல்யாணம் [illegible] முடிந்தது. அவரோட பேரு ராஜா. பேருக்கு ஏத்தமாதிரி ராஜா மாதிரியேதான் இருந்தார். நிர்மலா குடுத்து வச்சவள்னு எல்லாருமே சொன்னா. அதைக் கேட்கும்போது எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது.

பத்துப் பொருத்தமும் பொருந்தி இருந்தது

ஜாதகப் பொருத்தம், ராசி, நட்சத்திரம், லக்னம், பெயர் பொருத்தம்னு எல்லாப் பொருத்தமும் பொருத்தியிருக்கு. 'அனுஷமும் பரணியும் சேர்ந்த கேக்கணுமா' கவலைப்படாதேள். ரொம்ப ரொம்ப அமோகமா இருப்பான்னு ஜோசியர் சொன்னார்.

எங்கப்பாவுக்கு டெலிபோன்ஸ்ல வேலை. எங்கம்மா வீட்டோட ஹவுஸ் wife. ரொம்ப ஆச்சாரம். காலங்கார்த்தால குளிச்சுட்டு மடியாத்தான் எதையுமே பண்ணுவா. எழுந்ததுலேருந்து வாய் மந்திரத்தை முணுமுணுத்துண்டே இருக்கும். அவ்வளவு பக்தி. நாம பண்ற பூஜை புனஸ்காரம் எதுவும் வீணாப்போயிடாதுன்னு சொல்லுவா. என் கூடப் பொறந்தவா ஒரு அக்காவும், மூணு தங்கைகளும். ரொம்ப ஓஹோன்னு இல்லைன்னாலும் கஷ்டங்கள் எதுவும் கிடையாது. அம்மா எல்லாத்தையும் இழுத்துப்புடிச்சு சிக்கனமா எப்படியோ சமாளிச்சுடுவா. இல்லேன்னா அஞ்சு பொண்ணுங்களை கரையேத்த முடியாதே.

என் கணவரின் குடும்பம்

என் மாமனார் மாமியாருக்கு 5 பொண்ணு 6 பையன். பெரிய குடும்பம். அவாளும் ரொம்ப மடியா பூஜை புனஸ்காரமெல்லாம் பண்றவாதான். தினப்படி கட்டிக்கிறதே மடிசார் புடவைதான். அவரோட அண்ணா மூணு பேர் தலை யெடுத்ததால தங்கைகளுக்கு கல்யாணம் பண்ணிவெக்க வசதியா இருந்தது. கடைசி பையன் இவர். ரொம்ப செல்லம். பணம் கேக்கரச்ச எல்லாம் குடுத்துண்டே இருப்பா. இவரோட அண்ணா பாங்க்ல வேலை

பார்த்ததாலே செலவுக்கு கேக்கும் போதெல்லாம் ஒரே புத்தம்புது ரூபா நோட்டுதான்.

கனவுகள்

எனக்கு நிறைய கனவுகள் சின்ன வயசிலேருந்தே உண்டு. நான் நன்னா படிச்சு பெரிய உத்யோகத்திலே இருக்கணும். நிறைய சம்பாதிக்கணும். என் குழந்தைகளை நன்னா படிக்க வெச்சு டிஸிப்ளினா வளர்க்கணும். யாருக்கும் பாரமா இருக்கக் கூடாது. நாலுபேர் பார்க்க கவுரவமா வாழணும், நம்பளைப் பார்க் கிறவாளெல்லாம் வாழ்ந்தா, இந்த மாதிரி வாழணும்னு சொல்லணும். இப்படி சொல்லிண்டே போகலாம். ஆனா நான் நினைச்சது ஒண்ணு. நடந்தது ஒண்ணு.

இந்த புஸ்தகத்தின் நோக்கம்

இந்த புஸ்தகத்ல என் கணவர் மூலமா நான் பட்ட அவமானங்கள், நிந்தனைகள், கண்ணீர்களை எழுதும் நோக்கம் என்னன்னு கேட்டா பதில் இதுதான்: என்னை மாதிரி நீங்களும் இந்த உலகத்தில கஷ்டப்படறீங்களா? கடன் பிரச்சனைல மாட்டிண்டு மீள முடியாம இருக்கீங்களா? எல்லாரும் உங்களை அவமானப்படுத்தறாளா? உங்க சொந்த மனுஷாளே உங்களை புரிஞ்சிக்க மாட்டேங்கறாளா? உங்களுக்கும் உங்க வீட்டுக்காரருக்கும் இடையில சுமுகமான உறவு இல்லையா? உங்க குடும்பத்தில நிம்மதி இல்லையா? இன்னும் இந்த மாதிரி எந்த பிரச்சினைல நீங்க மாட்டிண்டு இருந்தாலும் உங்களுக்கு ஒருவழி இந்த உலகத்தில இருக்குன்னு காட்றதுக்குதான் இந்த புஸ்தகத்தை எழுதறேன். என்னடா இவா தன்னோட சொந்த புருஷனைப்பத்தி இவ்வளவு மோசமா எழுதியிருக்காளேன்னு இதை படிக்கப்போற நீங்க நினைச்சீங்கன்னா

அதுக்கு இதோ என் பதில்: நான் இதை எழுதினாதான் இந்த உலகத்தில எவ்வளவு பாடுபட்டு யாராலும் தீத்துவைக்க முடியாத பிரச்சனைல மாட்டிண்டு சாவை நோக்கிபோன என் வாழ்க்கைலேருந்து இன்னிக்கு என்னையும் என் குடும்பத்தையும் உயிரோட மீட்டெடுத்தவர் யாருன்னும், அவர் எவ்வளவு சக்தி வாய்ந்தவர்னும், அவரால தலையெழுத்தையே மாத்த முடியும்னும், அதுக்கு நான் என்ன பண்ணினேன்னும் உங்களுக்கு தெரியும். நான் எதையுமே எழுதலேன்னா ஆண்டவர் இயேசு கிறிஸ்து எந்த சூழ்நிலையிலேந்து எங்களைக் காப்பாத்தினார்னு உங்களுக்கு எப்படி தெரியும்? இது நான் கல்யாணமானதிலேருந்து கிட்டத்தட்ட 10 வருஷம் கஷ்டப்பட்ட என் கடந்தகால வாழ்க்கை. ஆனா நாங்க இப்போ ரொம்ப சந்தோஷமா சமாதானமா நன்னா இருக்கோம். அதனால நான் எல்லாத்தையும் மறந்து மன்னிச்சுட்டேன்னு நீங்க தெரிஞ்சிக்கலாம். நான் யாரையும் புண்படுத்தணும்ற நோக்கத்தில இதை எழுதலை. உங்க விருப்பத்தோட இந்த வழியை நீங்களும் பின்பற்றினா உங்களுக்கும் எனக்கு கிடைச்ச மாதிரி அதே நிம்மதியும் சந்தோஷமும் சமாதானமும் கிடைக்கும். இதைவிட மோசமான நிலைமையில நீங்க இருந்தாலும் உங்களையும் வாழவைக்க தெய்வம் இயேசு உயிரோட இருக்கார்னு நீங்க புரிஞ்சுக்கதான் இதை எழுதறேன். அதுவும் செலவே இல்லாம இலவசமா. (free) நன்னா யோசிச்சு முடிவெடுங்க. உங்க முடிவுதான் உங்க வாழ்க்கை நிலைமையை தலைகீழா மாத்தும்.

புதுமண வாழ்க்கை

நான் பட்டப் படிப்பு முடிச்சதுமே ஒரு கம்பெனியிலே வேலைக்கு சேர்ந்துட்டேன். இவா; பார்த்துண்டிருந்த வேலையை விட்டுட்டு சொந்தமா லெதர் கெமிக்கல் பிசினெஸ் பண்றேன்னு எல்லார் பேச்சையும் கேட்டு இறங்கினார். எங்கப்பா கடன் வாங்க பயப்படுவார். இருந்தா செலவழிப்பார். இல்லைன்னா பட்டினியா இருன்னு சொல்லுவார். ஆனா இவருக்கோ கடன் வாங்கற துன்னா அல்வா சாப்பிடற மாதிரி. தைரியமா கையை யார் கிட்ட வேணும்னாலும் நீட்டிடுவார். வட்டி அதிகமான்னு கூட பாக்கமாட்டார். திருப்பி அடைக்க முடியுமான்னு யோசிக்கவும் மாட்டார். ரொம்ப தைரியம். லோன் போட்டு லட்சக்கணக்கா பணத்தை பிசினெஸ்ல போட்டார். நிறைய கிரெடிட் கார்டுகளை வச்சிருப்பார். ஒரு நாளைக்கு 15,000 ரூபா வரைக்கும் வருமானம் வந்ததுன்னு சொல்லுவார்.

ரொம்ப நண்பர்கள் அவருக்கு உண்டு. எல்லாரையும் கூட்டிண்டு வெளில போவார். கொஞ்ச நாள்ல சிகரெட் பிடிக்கிற பழக்கம் எப்படி வந்ததுன்னே தெரியல. ஒரு நாளைக்கு 10 பாக்கெட்டுக்கு மேல பிடிப்பார். ராத்திரி தினமும் 11 மணிக்குமேலதான் வீட்டுக்கு வருவார். விடியக் காத்தால போயிடுவார். கேட்டா, பிஸினஸ்னா உனக்கு என்ன தெரியும்னு என்னோட வாயை மூடிடுவார். வேலைக்குப் போயிட்டு வந்து சமைச்சு வீட்டுக் காரியங்களை யெல்லாம் முடிக்கிறதுக்குள்ளே எனக்கு 11 மணி ஆயிடும். ஒரு மெஷின் மாதிரிதான் என் வாழ்க்கை இருந்தது. என் கனவுகள் பகல் கனவா போச்சு.

சீமந்தம்

என் மகன் விஜய் குமார் வ்யித்தில இருக்கிறப்பகூட என் மாமியார் தான் எனக்கு உதவி செஞ்சா. எங்களை கல்யாணமான 3வது மாசமே தனிக்குடித்தனம் வெச்சுட்டா. நான் நேரத்துக்கு சாப்டமாட்டேன். இவர் வர்றவரைக்கும் காத் துண்டிருந்து அப்புறந்தான் சாப்பிடுவேன்.

அதனால வயத்தில குழந்தை இருக்கும்போது அடிக்கடி மயக்கம் வரும். ஆஸ்பத்திரி யிலே அட்மிட் ஆகி எனக்கு குளுக்கோஸ் ஏத்துவா. அப்பகூட இவர் நேரத்துக்கு வரமாட்டார். பக்கத்து வீட்டிலே எல்லா ரும் இவரைக் கேட்டா இன்னிக்கு கொஞ்சம்

லேட்டாயிடுத்து, இனிமே சீக்கிரம் வரேன்னு சொல்வார், ஆனா வரவே மாட்டார். என் பையன் பிறந்து 3 மாசத்திலேயே நான் திரும்பவும் வேலைக்குப் போக ஆரம்பிச்சுட்டேன். என் நாத்தனார் தான் என் குழந்தையை ஒரு வயசு வரைக்கும் பாத்துண்டா. ஒரு நாளைக்கு குறைஞ்சது 1 மணி நேரமாவது என் வீட்டுக்கும் ஆபீஸுக்கும் நடப்பேன். சே... என்ன வாழ்க்கைடா இதுன்னு ரொம்ப நொந்து போயிட்டேன். சந்தோஷம்கிறதே என் வாழ்க்கையில இல்லாம போயிடுத்து.

பக்தி வைராக்கியத்தில் தீவிரம்

நான் ரொம்ப தெய்வ பக்தி உள்ளவள். வாழ்க்கையில சந்தோஷம் இல்லாததால இன்னும் தீவிரமான பக்தி வெறி கொண்டவளா மாறினேன். மாசத்திலே கிருத்திகை, அமாவாசை, பௌர்ணமி, பிரதோஷம், சஷ்டின்னு எல்லாத்துக்குமே விரதம்கிற பெயரிலே தண்ணீர் மாத்திரமே நாள் முழுசும் குடிப்பேன். அதனால தீராத வயித்த வலியையும் பரிசா வாங்கியிருக்கேன்.

கார்த்தால வேலைக்கு கிளம்பும்போது சொல்ல ஆரம்பிக்கிற ஸ்லோகங்களை வேலைக்கு போய் சேரும்போது தான் நிறுத்துவேன். பையிலே சின்னசின்ன ஸ்லோக புஸ்தகங்களா கந்த சஷ்டி கவசம், விஷ்ணு சஹஸ்ர நாமம், லிங்காஷ்டகம், பில்வாஷ்டகம், லஷ்மி அஷ்டோத்ரம், ஆஞ்சநேய சரித்திரம், நவரத்ன மாலைன்னு எல்லா புஸ்தகங்களும் வெச்சிருப்பேன். எல்லாமே மனப்பாடமா தெரியும். எந்த நண்பர்களுமே எனக்கு கிடையாது. இதை படிக்க படிக்க புண்ணியம்னு பெரியவா சொல்லியிருக்கான்னு அம்மா சொல்லுவா.

அது ஒண்ணுதான் எனக்கு தெரியும். அவர் கார்த்தால வெளில கிளம்பும்போது போறேன்னு சொன்னா உடனே என் கண்ணு கலங்கிடும். போயிட்டு வரேன்னு சொல்லுங்கோன்னு சொல்லுவேன். ராகு காலம், எமகண்டம் எல்லாம் மனப்பாடம். ஜாதகம், ஜோசியம், நியூமராலஜி, ஓலைச்சுவடின்னு ஒண்ணையும் விட்டதில்லை. அந்த அளவுக்கு கண் மூடித்தனமான நம்பிக்கை எல்லாத்திலேயும்.

ஒவ்வொரு வருஷமும் நவராத்திரி (ஆயுத பூஜை) வரும்போது தினமும் பூஜை பண்ணி 9 கெஜம் மடிசார் புடவை கட்டிண்டு 9 நாளும் ஒவ்வொரு வீடா வெத்தலை, பாக்கு, மஞ்சள், ரவிக்கை துணின்னு குடுத்துட்டு சாயந்திரம் சுண்டல் பண்ணி நெய்வேத்யம் பண்ணுவேன்.

ராகு காலத்திலே அம்மன் கோயிலுக்குப்போயி எலுமிச்சைத் தோலிலே விளக்கேத்துவேன். ஆஞ்சநேயருக்கு வடைமாலை சாத்துவேன். மட்டை தேங்காய் வாங்கி கட்டுவேன். ஒவ்வொரு பிரதோஷத்திற்கும் சிவன் கோயிலுக்குப் போவேன். எங்களோட கல்யாண நாளுக்கு ஒவ்வொரு வருஷமும் திருப்பதில இருப்போம். யார் எந்தக் கோயிலுக்குப் போனா நல்லதுன்னாலும் அதுக்கு எவ்வளவு செலவானாலும் உடனே போயிடுவேன்.

போறதுக்கு பஸ்ஸுக்குகூட பணம் இல்லாத நிலைமை கூட வந்தது. என்னோட பொண்ணு ஐஸ்வர்யாவை நான் கர்ப்பம் தரிச்சப்ப கம்பிளீட் பெட் ரெஸ்ட்ல இருக்கணும்னு டாக்டர் சொன்னார். அதனாலே என் வேலையை நான் விடவேண்டியதா போச்சு. அவள் வயித்திலே 3 மாசமா இருந்ததிலேந்து குழந்தை பிறந்து 6 மாசம் வரைக்கும் நான் வேலைக்குப் போகலை. அதுக்குள்ளே நான் பட்டபாடு கொஞ்சமில்ல. இவர் வீட்டுக்கு பணம் குடுக்க மாட்டார். வாடகையிலே ஆரம்பிச்சு வீட்டு செலவு முழுசும் சமாளிக்க நான் பட்டபாடு கொஞ்சமில்லை.

இப்படி எல்லாத்தையும் தொலைச்சுட்டு ஒரு நாள் என் கழுத்திலே இருந்த தாலிச்சரடையும் கேட்டார். இது உங்களுக்கும் எனக்கும் உள்ள உறவுக்கு அடையாளமா நீங்க கட்டினது. நான் இதை கழட்டிட்டா நமக்குள்ளே உறவே போய்டும்னு சொன்னப்ப நமக்குள் உறவே இல்லைன்னாலும் பரவாயில்லை எனக்கு அந்த சரடு வேணும்னு கேட்டார். நான் முடியாதுன்னதால அதை அறுத்து எடுத்துண்டு போயிட்டார். அன்னிக்கு நான் அழுத அழுகை கொஞ்சநஞ்சமில்ல. நாளுக்கு நாள் என் வாழ்க்கை நரகமா போயிண்டே இருந்தது. டெலிவெரிக்கு கூட கையிலே பணம் இல்லாம திண்டாடி தெருவுல நின்னேன். அப்பக்கூட அவர் கொஞ்சமும் வருத்தப்படலை. பணத்துக்கு எந்த வழியும் தெரியலை. எங்கம்மாதான் பணம் குடுத்தா. என் மனசு ரொம்ப வேதனைப்பட்டது.

என் இரண்டு குழந்தைகளையும் நான் பிரசவிக்கும்போதும் அவர் எனக்கு எதுவுமே வாங்கிக்குடுத்ததும் இல்லை, என்னை கவனிச்சதும் இல்லை. நமக்கு ஆதரவா அவர் இருக்கமாட்டாராங்கிற ஏக்கம் இருக்கும். ஆனா என் வாழ்க்கையிலே அதிலேயும் மண்ணுதான் விழுந்தது. நான் எங்கப்பா அம்மாவுக்கு பாரமா இருந்தேன். குழந்தை பிறந்த பிறகும் எனக்கு நெய், பால், தயிர்

வாங்கறதுக்குகூட எங்கிட்ட பணம் இல்லை. எங்கம்மா அதை வாங்கி குடுக்கும்போதெல்லாம் இப்படி ஒரு மனுஷன் என் பொண்ணுக்கு வந்து வாச்சி ருக்கானே, எல்லாம் என் தலையெழுத்து, போன ஜென்மத்திலே நான் பண்ணின பாவம்னு சொல்லி புலம்புவா. அதை சாப்பிடும்போது நான் நினைப்பேன். இந்த பணத்தையெல்லாம் எப்படி யாவது அவாளுக்குத் திருப்பி குடுத்துடணும்னு. அந்த அளவுக்கு கூனிக்குறுகி போயி ருந்தேன்.

கடன் தொல்லை

வருஷங்கள் போகப்போக அவரோட நடவடிக்கைகள் இன்னும் மோசமா போக ஆரம்பிச்சது. சரியா வீட்டுக்கு வர்றதுகூட கிடையாது. எல்லா இடத்திலேயும் கடன் வாங்கிட்டார். வியாபாரம் பண்றேன்னு சொல்லி என் நகைகள் எல்லாமே போச்சு. 10 வட்டியானாலும் வாங்கி செலவு பண்ணிடுவார். எவ்வளவு பணம் வந்தாலும் போறாது. இன்னும் வேணும்னு கேட்டுண்டே இருப்பார். கடங்காரங்க ராத்திரி 1 மணிக்கு வந்து கதவை தட்டுவா. நானும் குழந்தைளும் பயந்து ஒளிஞ்சுக்குவோம். அவர் வீட்டிலே இருந்தாலும் கதவை திறக்க மாட்டார். என்னை திறக்க சொல்லிட்டுதான் போய் ஒளிஞ்சுக்குவார். வாயை திறந்தாலே பொய்தான் வரும். குடும்ப செலவுக்கு பணம் கேட்டா இருந்த பணத்தை பிட்பாக்கெட் அடிச்சுட்டாங்கன்னு சொல்லி என்னை நம்ப வைப்பார். வீட்ல எந்த பொருளை பார்த்தாலும் எடுத்துண்டு போய் அடமானம் வெச்சுடுவார். கார்த்தால நான் வேலைக்கு போகும்போது டிவி இருக்கும். ராத்திரி வந்து பார்த்தா டிவி இருக்காது. கேட்டா அவசரமா பணம் தேவைப்பட்டது, அடமானம் வெச்சுட்டேன். 2 நாள்ல எடுத்துடுவேன்னு சொல்லுவார். 2 வருஷம்

ஆனாலும் போனபொருள் போனதுதான். என்னால முடிஞ்ச மட்டும் அவர் வாங்கின கடன்களை அடைச்சிருக்கேன். ஆனாலும் கடன் தொல்லை ஓயலை. அவரைவிட நான் வணங்கின தெய்வங்கள் மேலதான் நான் அதிக நம்பிக்கை வெச்சிருந்தேன்.

ஒரு நாள் ராத்திரி நானும் என் குழந்தைகளும் படுத்துண்டிருந்தோம். அப்போ நாலு பேரு குடிச்சுட்டு வந்து கதவை உடைக்கறாப்போல தட்டினா. நான் பயந்து கட்டிலுக்கு கீழே போயி, குழந்தைளோட வாயைப் பொத்தி சத்தம் போடாமல் இருக்கச்சொன்னேன். அவங்க வீட்டிலே யாரும் இல்லைன்னு நினைச்சுண்டு கொஞ்ச நேரம் கழிச்சு திரும்பவும் வந்தா. நான் பயந்துபோய் கதவைத் திறக்கல. கொஞ்ச நேரம் கழிச்சு நான் தவழ்ந்து போய் ஜன்னல் வழியா லேசா எட்டிப் பார்த்தேன். அவா அந்த தெரு முனைல நின்னு மாடியையே பார்த்துண்டிருந்தா. நாங்க அந்த வீட்ல முதல் மாடில குடி இருந்தோம். இப்படி நடுங்கியேதான் ஒவ்வொருநாளும் கழிக்க வேண்டியிருந்தது. கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை. நிம்மதியா ராத்திரில தூங்கக்கூட முடியாதபடி இந்த மனுஷன் இப்படி பண்ணிட்டாரேன்னு குமுறி குமுறி அழுவேன். தினமும் செத்து செத்து பொழைக்கிற இந்த பொழப்பு எதுக்குன்னு நினைப்பேன்.

என் ஆசையிலே மண்

ஒரு தடவை எங்க சொந்தக்காரா கல்யாணத்துக்கு எங்களைக் கூட்டிண்டு போறேன்னு சொன்னார். நாங்க நாலு பேரும் பொழுது விடிஞ்சதுமே கிளம்பினோம். வழியிலே வடபழனி பஸ் ஸ்டாண்டுலே எங்களை நிக்கச்சொல்லிட்டு அவர் மட்டும் இதோ 5 நிமிஷத்துல வந்துடுறேன்னு சொல்லிட்டு கிளம்பி போனார். நான் அதே வடபழனி முருகன் கோவில்ல எனக்கு கல்யாணமானதையெல்லாம் நினைச்சு பாத்துண்டு நின்னுண்டு இருந்தேன். ஆனா 1 மணி நேரம் ஆச்சு. வரவே இல்லை. நான் அவருக்கு போன் பண்ணினா, இதோ உடனே வந்துடுவேன், கொஞ்சம் வேலையா இருக்கேன், நாம போறதுக்கு கொஞ்சம் பணம் வேணும்ங்றதால அதுக்காக வெயிட் பண்றேன்னு சொன்னார். நானும் அதை நம்பி இரண்டு குழந்தைளோட அந்த வேகாத வெயில்ல நின்னுண்டு இருந்தேன். மத்தியானம் மணி ஒண்ணு ஆச்சு, நானும் போன் பண்ணிப்பண்ணி அலுத்துட்டேன். பசங்க பசின்னு வேற அழறா. கடைசியிலே 1.30 மணிக்கு வந்தார். அப்பக்கூட பணம் இல்லைன்னுதான்

சொன்னார். இவ்வளவு நேரம் வெயிட் பண்ணிப் பார்த்தேன். அவன் வரலை. நீ வேற தொந்தரவு பண்ணினதால வந்துட்டேன்னு சொன்னார். நான் அப்பக்கூட அவர் மேல் சந்தேகப்படலை. சரி போகட்டும். நாம எங்கேயாவது சாப்பிட்டு; போயிடலாம், பசங்க ரொம்ப பசியா இருக்காங்கன்னு சொன்னேன். கடைசியா நாங்க கல்யாணத்துக்கே போகாம வீட்டுக்குப் போயிட்டோம். எனக்கு சரியான தலைவலி வந்ததுதான் மிச்சம். இப்படித்தான் என்னோட ஆசையிலே ஒவ்வொரு தடவையும் அவர் மண்ணைை அள்ளிப் போடுவார். ஒரு சொந்தக்காரா விசேஷத்துக்கும் போனதில்லை.

சூதாட்ட வெறி

இவர் உண்மையிலேயே பிசினஸ்தான் பண்றாரா? இல்லை வேற எதுவும் தப்பு வழிக்கு போயிட்டாரா? ஏன் இவ்வளவு கடன் தொல்லை? எங்கே போறார்? என்ன பண்றார்னு விசாரிச்சேன். அப்புறமாத்தான் தெரிஞ்சது இவர் எப்பேர்ப்பட்ட மோசமான சீட்டாட்ட பழக்கத்துக்கு அடிமையாய் போயிருக்கிறார்னு. சென்னையில இருக்கிற எல்லா கிளப்புகளிலேயும் இவர் மெம்பர். எங்களுக்குன்னு ஒரு M80 வண்டி இருந்தது. அதையும் அடிக்கடி அடமானம் வெச்சு சீட்டு ஆடிடுவார். ஒரு முறை அந்த வண்டியை மீட்க 5000 ரூபாய் வேணும்னு கேட்டார். நானும் பணம் எடுத்துண்டு உங்களோடு வர்ரேன்னு பிடிவாதமா அவரோடு கிளம்பி குழந்தைளை அம்மாகிட்ட விட்டுட்டு குரோம்பேட்டை ரயில்வே ஸ்டேஷன்ல அரை மணி நேரம் வாக்குவாதம் பண்ணிண்டே நின்னோம். ஏன்னா நான் எப்ப பணம் குடுத்தாலும் தொலைச்சுட்டேன்னுதான் வந்து சொல்லுவார். வண்டியும்; திரும்ப வராது. ஒரு மணி நேரம் அவரோட வாதாடியும்கூட என்னை அழைச்சுண்டு போக அவருக்கு மனசில்லை. அப்புறம் ஓடற ரயிலிலே ஏறிண்டு அவர் போயிட்டார். நான் அழுதுண்டே வீட்டுக்கு போனேன். அம்மா கேட்டா என்ன இவ்வளவு சீக்கிரம் வந்துட்டே! வண்டி எங்கே? நான் சொன்னேன் அவர் இவ்வளவு நேரம் சண்டை போட்டுட்டு என்னை விட்டுட்டு போயிட்டார். அம்மா சொன்னா் இருதயம்னு ஒண்ணு அவருக்கு இருக்கா இல்லையா? ஏன் இப்படி பாடாப்படுத்தறாரே?

மிரட்டல்

ஒரு நாள் எட்டு பேரு ராத்திரி 11 மணிக்கு மேல வந்து கதவைத் தட்டினா. நான் திறந்தப்ப அவா 50,000 ரூபாய் பணம் கொடுத்ததைத் திரும்ப வாங்க வந்தோம்னு சொன்னா. நீங்க குடுத்தது எனக்கு

தெரியாது அவர் கிட்டயே போய் கேளுங்கன்னு நான் சொன்னேன். அலானோ நாங்க அவரை எங்க தேடியும் பிடிக்க முடியலை. நீ தானே அவரோட மனைவி, நீ தான் குடுக்கணும்னு மிரட்டினா. எங்க வீட்ல ஒரு பொருள் இருக்கான்னு பாருங்க. எதை வித்து நான் உங்களுக்கு பணத்தை தருவேன்னு கேட்டேன். என்னா வீடே துடைச்ச இருந்தது. உட்கார ஒரு சோபா கூட இல்லை. ஆனா அவங்க நான் சொல்றதை எதுவுமே கேட்கற நிலைமையில இல்லை. நாளைக்கு ராத்திரி வருவோம், பணம் குடுக்கலைன்னா வீட்டில இருக்கிற சாமான்கள் எல்லாத்தையும் வெளியே வீசிடுவோம். போலீஸ் ஸ்டேஷன்ல உன்னை கம்ப்ளெயின்ட் குடுத்துடுவோம்னு மிரட்டிட்டு போயிட்டா.

அப்போதான் உணர்ந்தேன் எனக்கு உதவிசெய்ய யாருமேயில் லைன்னு. உலகத்திலே நிறைய உறவுகள் இருந்தாலும் கஷ்டப் படும்போது ஒருத்தருமே வரமாட்டான்னு புரிஞ்சுண்டேன். அப்படியே வந்தாலும் எதுவரைக்கும் எனக்கு உதவ முடியும்? கல்யாணமான பொண்ணுக்கு புருஷன் சரியா இல்லைன்னா வாழ்க்கைல எதுவுமே சரியா இருக்காது. அன்னிக்கு ஒரு முடிவு எடுத்தேன். சீ... இது என்ன வாழ்க்கை? புருஷன் சரியில்லை. அப்பா அம்மா, கூடப்பிறந்தவா, மாமியார், மாமனார் எல்லாருமே இருந்தும் நாம அனாதையா இருக்கோம். எதுக்காக நாம உயிரோட இருக்கணும்? தினமும் இப்படி அழுதே சாகறதுக்கா? வேண்டாம்... முடிவு எடுத்துட்டேன்.

தற்கொலை

இனி ஒரு நிமிஷம் கூட உயிரோட இருக்கப்படாது. குழந்தைகளும் உயிரோட இருக்கப்படாது. நாம போயிட்டா, அதுங்களை யாரு பார்ப்பா? இந்த மனுஷன் பார்த்துக்க மாட்டார். பிள்ளைகள் அனாதைகளா தெருவுல பிச்சைதான் எடுக்கணும். எல்லாருமே சாவோம். அது ஒண்ணுதான் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு. நான் மருந்து கடைக்கு போயிட்டு வரேன்னு என் பையன்கிட்ட சொல்லிட்டு கிளம்பினேன். அவன் ஆரம்பத்திலே இருந்தே என்னை கவனிச்சிண்டு இருந்திருக்கான். என் முகம் போகும்போக்கு, நான் ரெஸ்ட்லெஸ்ஸா இருந்தது. பிறகு ஒரு முடிவு எடுத்ததற்கான அமைதி எல்லாத்தையும் கவனிச்சிண்டு இருந்திருக்கான். அதனால பயந்துண்டு அவன் என்னை விடவேயில்லை. ரொம்ப அழுதான். கோவத்திலே அவனை ரெண்டு அடி அடிச்சிட்டேன். அப்புறம்

அவனோட சேர்ந்து நானும் அழுதேன். ஏன் எனக்கு சாவும் வரலை வாழவும் முடியலை... என் ஆண்டவர் தான் அன்னிக்கு எங்களைக் காப்பாத்தி இருக்கார்னு இப்ப தெரியும். அப்போ தெரியாது. **நான் உன்னைத் தாயின் கருவிலே உருவாவதற்கு முன்னமே தெரிந்து கொண்டேன்னு ஆண்டவர் சொல்லியிருக்காரே.** அவர்தான் என்னை அந்த தற்கொலை எண்ணத்திலேந்து தடுத்து காப்பாத்தி இருக்கார். **ஒரு மனுஷனோட மனசை மாத்தக்கூடிய சக்தி இயேசுவுக்கு மட்டும்தான் உண்டு. ஏன்னா அவர் தான் படைச்சவர்** அப்படின்னு இப்ப தெரியும். ஏன்னா எனக்கு யாரும் இயேசுவைப்பத்தி அன்னிக்கு சொல்லலை. சொல்ற சந்தர்ப்பமும் கிடைக்கல. ஆனா இதைப் படிக்கிற உங்களுக்கு இன்னைக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு. அதைப் பயன்படுத்திக்கோங்க.

எனக்கு நானே தண்டனை

நான் ஒரு மெஷின் மாதிரி வேலைக்கு போறதும் வீட்டு வேலைகளை செய்யறதும் குழந்தைள பார்க்கிறதும் ராத்திரி நேரம் கழிச்சு படுக்கிறதுமா என் நாட்களை ஒட்டினேன். நான் தனியா இருக்கும்போது என் இரண்டு கையிலேயும் நானே சூடு போட்டுக்குவேன். வலி தாங்காமல் கண்ணீர் வரும்போது இது எனக்கு தேவைதான், நான் செஞ்ச பாவத்துக்கு தண்டனையை நானே குடுத்துக்கறேன்னு நினைப்பேன். சரியான சாப்பாடு இல்லாததால அடிக்கடி மயக்கம் போட்டு விழுந்துடுவேன். சுவத்திலே முட்டிக்குவேன். நெத்தி வீங்கிடும். ஏன் இப்படி செய்யறேன்னு எனக்கே தெரியாது. ஏதோ ஒண்ணு என்னை தண்டனை குடுக்கச் சொல்லி தூண்டும். கிட்டத்தட்ட ஹிஸ்டீரியா பேஷண்ட் மாதிரி ஆயிட்டேன். எவ்வளவோ கனவுகளோட ஆசைகளோட எதிர்பார்ப்புகளோட திருமண வாழ்க்கைக்குள் வந்த எனக்கு இதையெல்லாம் தாங்கிக்க முடியலை. பெரிய இடி விழுந்தாப்ல இருந்தது. அதனால யாரு எந்தப் பரிகாரம் பண்ணச் சொன்னாலும் உடனே ஓடிப்போய் பண்ணுவேன். எப்படியாவது என் கணவர் மாறி வாழ்க்கை சந்தோஷமா ஆயிடாதான்ற ஏக்கம்.

மத்யஸ்தம்

எனக்கு 5 நாத்தனார்; 5 மைத்துனர் இருக்கா. நான் அவா கிட்ட இவரைப்பத்தி சொல்லும்போதெல்லாம் நீ பேசாமல் அவனை விட்டுடு. அவன் திருந்த மாட்டான்னு சொல்லுவா. நானும் நிறைய

புடவை அவர்கிட்ட உங்களுக்கு அப்படி எவ்வளவுதான் கடன் இருக்குன்னு எங்கிட்ட சொல்லுங்க, நாம எப்படியாவது அதை அடைக்க வழியைத் தேடலாம். ஆனா நீங்க திரும்பக் கடன் வாங்காமல் இருந்தால் அதுவே போதும்னு சொல்லுவேன். அப்போ நினைவு இருந்ததை சொல்றேன்னு எழுதும்போது கிட்டத்தட்ட 85 லட்சம் வந்தது. இதை அம்மா கேட்டவுடனே நீ அவரை விட்டுடு. சீட்டாட போனவன் திருந்தினதா இதுவரைக்கும் கேள்விப் பட்டதேயில்ல. தனியா ஒரு வீடு எடுத்துண்டு இரு. குழந்தைகளை ஸ்கூல் முடிஞ்சு வந்தவுடனே நான் பார்த்துக்கறேன்னு சொன்னா. ராத்திரியிலே நான் தனியாய் இருக்க ரொம்பவும் பயந்தேன். இன்னும் கொஞ்சநாள் பார்க்கலாம். அதுக்குள்ள அவர் மாறிடுவார்னு நம்பிண்டே இருந்தேன்.

சம்பளம் தொலைந்தது

அவர் ரெண்டு நாளைக்கு ஒரு தடவைன்னு வீட்டுக்கு வர ஆரம்பிச்சார். அவர் கிட்ட ஒரு சாவி இருக்கும். வீட்ல நான் பணத்தை எந்த இடத்திலே வெச்சுட்டு போனாலும் திரும்பி வேலையிலேந்து வந்து பார்க்கும்போது அது இருக்காது. ஒரு தடைவ நான் சம்பளத்தை வாங்கி மேலே பரண்ல ஒரு கோணியில ஒரு கவர்ல போட்டு வெச்சுட்டு வேலைக்கு போனேன். அவர் அதைக்கூட எப்படியோ தேடி கண்டுபிடிச்சு எடுத்துண்டு போயிட்டார். நான் அதைக்கேட்டா பயங்கரமா சண்டை போட்டு உனக்கு நான் முக்கியமா? உன் பணம் முக்கியமான்னு கேட்டார். நான் என் சின்ன வயசிலிருந்தே யாருக்கும் பாரமாக இருக்கிறதை விரும்ப மாட்டேன். தினமும் நான் ஸ்கூலுக்கு போக அப்பா பஸ்ஸுக்கு குடுத்த பணத்தை ஒரு வேளை நடந்தே போய் மிச்சம் பண்ணி மாசக்கடைசில அப்பாகிட்டயே அதை திருப்பி குடுப்பேன். அவா கஷ்டத்ல இருக்கும்போது அந்த பணம் ரொம்ப உதவியா இருக்கும். எங்கப்பா சொல்லுவா உன்னைப் பெத்ததுக்கு நான் புண்ணியம் பண்ணியிருக்கேன்னு.

தனிமை

நிறைய தடைவை எங்க மாமியார் வீட்டு விசேஷங்களுக்கு போகும்போதெல்லாம் நான் மட்டும் தனியா ஒரு ஓரத்தில நின்னு அழுதுண்டே இருப்பேன். அவா எல்லோரும் குடும்பம் குடும்பமா சந்தோஷமா இருப்பா. எனக்கும் அந்த சந்தோஷம் கிடைக்காதான்னு ஏங்குவேன். இவர் மட்டும் சரியா இருந்தா நாமும் குடும்பமா

நிம்மதியா இருக்கலாமே.. நான் நினைச்ச வாழ்க்கை வேற, எனக்கு கிடைச்ச வாழ்க்கை வேற. எங்களுக்குள்ள சண்டை சச்சரவு வரும்போதெல்லாம் என் குழந்தைங்க அவரைப் பார்த்து நீ வெளியிலே போயிடு, என் அம்மாவை தினமும் அழவைக்கிறன்னு கேட்பா. அதுக்கு அவர் குழந்தைங்க கிட்டகூட என்னைப்பத்தி தப்பா சொல்லிக்குடுத்திட்டியான்னு சண்டை போடுவார். நான் ஒவ்வொரு நாளும் எனக்கு நிம்மதி கிடைக்குமான்னு ஏங்கினேன்.

வயிற்று வலி

ஒரு தடவை எனக்கு அடி வயித்திலே ரொம்ப வலி இருந்தது. டாக்டர் உன் கர்ப்பபையை சுத்தம் பண்ணனும், அதுக்கு 2500 ரூபாய் செலவாகும்னு சொன்னார். எங்கிட்ட பணம் இல்லை. நான் அவர் கிட்ட விஷயத்தைச் சொன்னேன். உடனே நான் பணம் தர்ரேன், நீ அட்மிட் ஆகறதுக்கு ஏற்பாடு செய்யின்னார். நான் திரும்பத்திரும்ப கேட்டேன். உங்களை நம்பித்தான் அட்மிட் ஆகப்போறேன். ஏன்னா எங்கிட்ட சுத்தமா பணம் இல்லைன்னு சொன்னேன். அவர் சொன்னார்: ஏண்டி இவ்வளவு வயித்த வலில அவஸ்தை படும்போது நான் பணம் குடுக்காம இருப்பேனா? என்னை நீ என்ன கல் நெஞ்சக்காரன்னு நினைச்சியா? நான் உன்னை அட்மிட் பண்ணிட்டு பணத்தோட வர்றேன்னார். நானும் எங்கம்மாவும் ஆஸ்பத்திரில இருந்தோம். சிகிச்சை முடிஞ்சது. ஆனா அவர் வரவேயில்லை. சூதாட்டத்ல மும்முரமா விளையாடினதால ஆஸ்பத்திரி பக்கங்கூட வரலை. என் நினைப்பே அவருக்கு இல்ல. நான் அட்மிட் ஆனது தெரிஞ்சும்கூட பணத்திற்கு அவ என்ன பண்ணுவாங்ற எண்ணமே இல்லை. அவ்வளவு வெறி அந்த சூதாட்டத்தில. நான் என்ன பண்றதுதுன்னு தெரியாம தவிச்சப்போ, எங்கம்மாதான் எப்படியோ சமாளிச்சு பணத்தை கட்டினா. நான் ரொம்ப அழுதேன். இப்படியும் ஒரு மனுஷர் இருப்பாரா? அவர் என்னிக்குத்தான் திருந்துவாரோன்னு ரொம்ப வேதனை பட்டேன். அந்த பணத்தை எங்கம்மாவுக்கு திருப்பி எப்படி குடுக்கப்போறேனோன்னு புரியலை. ஆனா நான் நினைச்சுக்கூட பார்க்கல. எங்க ஆபீஸ்ல ஆஸ்பத்திரிக்கு செலவழிச்ச பணத்தை எனக்கு குடுத்து உதவினா. அந்நிக்கு நெனைச்சேன் இந்தக் கல்நெஞ்சக்காரர் மனசை மாத்த இந்த உலகத்தில வழி இருக்கா? இவர் மாறுவாரா? அது நடக்குமா? அது வரைக்கும் நான் உயிரோட இருப்பேனா?

மலை ஏறினா மனசு மாறும்

இவரால சீட்டாட்டத்தை மறக்கவும் முடியல, விடவும் முடியல. எப்பவும் கை அரிச்சிண்டே இருந்தது. எங்கேயிருந்து பணத்தை எடுக்கலாம், எப்போ போய் ஆடலாம்னு தான் மனசு நினைச்சதே தவிர இந்த பழக்கத்தை விட்டுடலாம்னும் அது ஒரு பெரிய பாவம்னும் தோணவேயில்லை. மலைக்கு 15 தடவை போன எங்கப்பாவுக்கு தெரிஞ்ச மாமா ஒருத்தர் எங்கிட்ட வந்து நீ உன் ஆத்துக்காரரை ஒரு தடவை சபரி மலைக்கு விரதம் இருந்து அனுப்பி வை. அவர் கண்டிப்பா மனசு மாறுவார்னு சொன்னார்.

என் மாமியார்கிட்ட ஒரு வார்த்தை கேட்டேன். சரி போகச் சொல்லு. எப்படியோ நல்லது நடந்தா சரின்னா. நானும் அவர்கிட்ட நீங்க ஒரு தடவை மலைக்கு போயிட்டு வாங்கோ. நமக்கு நல்லது நடக்கும்னு அம்மாவும் அந்த மாமாவும் சொல்றான்னு சொன்னேன். அவர் நீ செலவுக்கு பணம் குடுக்கறதா இருந்தா நான் போறேன்னார். நானும் அவர் திருந்தினா போறும்னு சொல்லி எவ்வளவு செலவானாலும் பரவாயில்ல. கடன் வாங்கியாவது நான் குடுக்கறேன்னு சொன்னேன். கடனையும் வாங்கி குடுத்தேன். மாம்பலத்தில சிவாவிஷ்ணு கோவில் இருக்கு. அங்கதான் நாங்க எல்லாருமா சேர்ந்து இருமுடி கட்டிண்டு கிளம்பறோம். நீயும் சாயங்காலம் சரியா மூணு மணிக்கு வந்துடுன்னு கார்த்தால எங்கிட்ட சொல்லிட்டு பணத்தை வாங்கிண்டு போனார். நான் மூணு மணிக்கு போய் பார்த்தா அவர் இல்லை. போன் பண்ணி எங்கே இருக்கேள்னு கேட்டேன். இதோ வர்றேன்னார். வந்து பூஜையெல்லாம் முடிஞ்சுது. சாமி கிட்ட நன்னா வேண்டிண்டேன். அவர் போகும்போது எந்த மனசோட போனாலும் திரும்பி வரும்போது மாறின மனுஷனா, சீட்டாட்டம் மேல ஒரு வெறுப்பு வரணும், அதை மறக்கணும்னு வேண்டிண்டேன். இருமுடி கட்டி முடிஞ்சுது. அவர் என்னண்டை வந்து நீ கார்த்தால குடுத்த பணம் செலவாயிடுத்து. எனக்கு திரும்பவும் பணம் வேணும்னு சொன்னார். எனக்கு தூக்கி வாரிப்போட்டது. எங்கிட்ட பணம் இல்லை. ஆனாலும் சாமி காரியத்துக்கு வேணும்கிறதால பக்கத்ல அக்கத்ல இருக்கிறவா கிட்ட கடன் வாங்கி உருட்டி பெறட்டி குடுத்தனுப்பினேன். அவர்மலைக்கு போயிட்டு திரும்பி வந்தார். கால் ரெண்டும் வீங்கி இருந்தது. வெந்நீர் வெச்சி ஒத்தடம் குடுத்தேன். அடுத்த நாள் கார்த்தால இரண்டு பேரும் கிளம்பினோம் வேலைக்கு. அவர்

சொன்னார் இன்னையிலேருந்து நானே குழந்தைகளை 7 மணிக்கு அம்மா வீட்லேருந்து கூட்டிண்டு வந்துடறேன். நீ ஒரு மணி நேரம் நடக்க வேண்டாம். ஆபிஸ்லேருந்து நேரே நம்ம வீட்டுக்கு போயிடு. நான் நினைச்சேன். நமக்கு விடிவுகாலம் வந்துடுத்துன்னு. ஆனா அவர் அதுக்கப்புறம் 2 நாள் வீட்டுக்கே வரலை. ஒரு மனுஷனோட மனசை, எண்ணத்தை, சிந்தனையை, பாவப் பழக்கத்தை மாத்தும் சக்தி இயேசப்பாவுக்கு தான் உண்டுன்னு அந்நிக்கு எனக்கு தெரியாம போயிடுத்து.

கடைசி கடிதம்

ஒரு நாள் ராத்திரி 8 பேர் குடிச்சுட்டு பணம் கேக்க வந்தா. ரொம்ப பெரிய ரகளை ஆயிடுத்து. போலீஸ் ஸ்டேஷனுக்கு கூப்பிட்டா. சாமான்களை தெருவிலே போடுவேன்னு மிரட்டினா. அந்த வீட்டு சொந்தக்காரர் தினம்தினம் இப்படி நடக்கிறதைப் பாத்துட்டு நீங்க வீட்டைக்காலி பண்ணிடுங்க, இனி உங்களுக்கு வீட கிடையாதுன்னு சொல்லிட்டு போயிட்டார். அது 11வது வீடு எனக்கு. இப்படி தினமும் அவமானப்படறதை விட நான் தற்கொலை பண்ண முடிவெடுத்து ஒரு லெட்டர் எழுதினேன். என் சாவுக்கு நான்தான் காரணம். என்னால சந்தோஷமா அவரோட இனி வாழமுடியும்கிற நம்பிக்கை போயிடுத்து. பணம் இல்ல, மனுஷர் இருந்தும் புண்ணியம் இல்ல, உடம்புல தெம்பு இல்ல, எதிர் நீச்சல் போட்டு வாழ இனி தைரியமும் இல்ல. இவ்வளவு லட்சம் கடனை அடைச்சு அவர் மனசு மாறி கெட்ட பழக்கங்களை விட்டுட்டு திருந்தி என்னோட குடும்பம் நடத்துவார்னு உலகத்தில ஒருத்தர்கூட எங்க மாமியாரும் சேர்த்து சொல்லமாட்டேங்கறா. இது முடியாது, இது நடக்கற காரியம் இல்லைங்கறா. நானும் போகாத கோவில் இல்லை. பண்ணாத பூஜை இல்லை. செய்யாத பரிகாரம் இல்லை. ஒண்ணுத்துக்கும் பலன் இல்லை. நிலைமை இன்னும் மோசமாத்தான் போனதே ஒழிய இதுக்கு ஒரு தீர்வு வரல. எல்லாம் உன் தலையெழுத்து. அதை மாத்த யாராலேயும் முடியாது. நீ பண்ணப் பாவம்னு சொல்றா. அதனால நான் இந்த உலகத்தைவிட்டே போறேன்னு எழுதிவெச்சிட்டு நாளைக்கு காலங்கார்த்தால வேலைக்கு போகாம முதல்ல மருந்து கடைக்குப்போய் மருந்து வாங்கி நானும் குழந்தைகளும் சாப்பிட்டுட்டு ஒரேடியா போயிடணும்னு முடிவேடுத்தேன்.

இயேசுவின் அறிமுகம்

ஆனா ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வேற கணக்கு போட்டிருந்தார். அவர் **நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை. நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்னு** சொல்லியிருக்கார். **ஒருத்தரும் கெட்டுப்போறது என் சித்தமில்லைன்னு** சொன்னவர் எங்களைச் செத்துப்போக விடுவாரா? அடுத்த நாள் கார்த்தால என்னோட கடைசித் தங்கை (ஒரு கிறிஸ்தவரை திருமணம் செய்து கொண்டவள்) எங்கிட்ட வந்து இயேசுவைப் பத்தியும் அவரால முடியாத விஷயம் ஒண்ணுமே இல்லைன்னும் சொன்னா. அவ கல்யாணத்துக்கப்புறம் அவளை நாங்க பார்த்ததேயில்லை. அப்படி ஒரு கட்டுப்பாடு வீட்ல. அப்போ என்னால அவ சொன்னதை நம்பமுடியலை, ஏத்துக்கவும் முடியல. 32 வருஷமா நான் வணங்கின ஏகப்பட்ட தெய்வங்களைவிட இயேசு பெரியவரா? இவ்வளவு நாள் நடக்காத அற்புதம் இப்ப மட்டும் நடக்குமா?

ஆனா அவளோ, இவ்வளவு நாளா நீ கேட்டும் உனக்கு விடிவே இல்ல, இயேசுகிட்ட கேட்டுப்பாரு. அவரு செய்யறாரா இல்லையான்னு பாருன்னு சொல்லி எங்கிட்ட ஒரு பைபிள் குடுத்து இதைப்படின்னு சொன்னா. ரொம்ப நேரம் வாக்குவாதம், சந்தேகங்களுக்கு பின்னாடி, இப்ப நான் என்ன பண்ணணும்னு சொல்றன்னு கேட்டேன். அவ தினமும் கார்த்தால 5 நிமிஷம்; இயேசுகிட்ட உன் கஷ்டத்தையெல்லாம் சொல்லி எனக்கு ஒரு அற்புதம் பண்ணுங்கோன்னு கேளு. அது பேருதான் ஜெபம். அப்போ நான் சொன்னேன்: இனி கடவுளுக்கு பூஜை பண்ண, பரிகாரம் பண்ண, காசு செலவழிக்க எங்கிட்ட ஒண்ணும் இல்ல. பூ வாங்கறதுக்கும் கல்பூரம் ஏத்தறதுக்கும் கூட காசு இல்லாத நிலைமை. என்னை விட்டுடு. உனக்கு சொன்னா புரியாது. அவ சொன்னா விக்கிரக ஆராதனையோ சிலை - உருவ வழிபாடோ அவருக்கு இல்ல. நீ பரிகாரம் ஒண்ணும் பண்ண வேண்டாம். அவர் உன்னோட பாவத்துக்காக தன்னோட உயிரையே குடுத்து இன்னிக்கு உயிரோட இருக்கார். அவரே உலகத்தில இருக்கிற எல்லாருக்கும் ஒரே பரிகாரி. ஒரு பைசா செலவே இல்லாம உன் வீட்டுக்காரரை இயேசு திருத்துவார். நீ அவரை நூத்துக்கு நூறு நம்புன்னு சொன்னா.

நானும் ஆத்மார்த்தமா இல்லை, அவ சொன்னதனாலயும் காசு செலவு இல்லேன்றதாலேயும் கார்த்தால மட்டும் ஜெபம்

பண்ணினேன். அந்த வேதப் புஸ்தகத்தை படிக்க மனசில்ல. என்னை ஒரு சபைக்கு அழைச்சிண்டு போனா. அங்கே அவா சொன்ன உபதேசம் என் வாழ்க்கையை அப்படியே படம்பிடிச்சு காட்டறதாகவும் அதுக்கு ஒரு விடிவை குடுக்கறதாயும் இருந்தது. ஆனா தொடர்ந்து என்னால அங்க போகமுடியல. இதைப் படிக்கிற நீங்க என்னைப் பத்தி அப்படியே எழுதியிருக்காளே! நானும் இப்படி தானே அவஸ்தை படறேன், ஆனா இவா மட்டும் இந்த நிலைமையிலேந்து எப்படி வெளில வந்தான்னு யோசிக்கிறீங்களா? மேலே படிங்க!

மாமியாரிடம் அனுமதி

நாளுக்கு நாள் என் நிலைமை மோசமாயிண்டே போச்சு. நான் என்ன பண்ணியும் அவர் திருந்தற மாதிரி தெரியல. கடைசில பட்டது போதும்டா சாமின்னு துணிஞ்சு என் மாமியார் வீட்டுக்கு போனேன். நான் அவாகிட்ட அம்மா இனிமே என்னால இவரோட வாழ முடியாது, நான் போறேன்னு சொல்லி அழுதேன். உன்னை ஒண்ணும் குறை சொல்லவே முடியாது, நீ 10 வருஷம் பொறுமையா இருந்ததே பெரிய விஷயம், நீ எங்கே இருந்தாலும் நன்னா இருப்பேன்னு கண்ணீரோட சொல்லி எங்களை அனுப்பினா. மாமியாரும் மாமனாரும் என் மச்சினர் வீட்ல தங்கியிருந்ததால அவங்களால தனியா எந்த முடிவும் எடுக்க முடியாத ஒரு சூழ்நிலை. எங்கம்மா வீட்லயும் நீ அவரை விட்டுடு, அவர் திருந்த மாட்டார்னுதான் சொன்னா. இத்தனையும் சொல்லிட்டு கடைசியில நீ தனியாதான் இருக்கணும், பள்ளிக்கூடம் முடிஞ்சதுக்கப்புறம் குழந்தைகளை நீ வர்றவரைக்கும் நாங்க பாத்துக்குவோமே தவிர எங்களோட நீ சேர்ந்து இருக்க முடியாது, வீடு ரொம்ப சின்னதுன்னும் சொல்லிட்டா. ஏன்னா அவ்வளவு அவமானத்தை இவர் மூலம் அவா அனுபவிச்சதனால அப்படி சொன்னா. அவாளை

சொல்லி குத்தமில்லை. யாராயிருந்தாலும் ஒரு அளவுதானே. ஆனா இயேசுவின் அன்புக்கோ அளவே இல்ல. அவமானமோ நிந்தனையோ என்ன வந்தாலும் நம்ம கூடவே இருப்பார், நம்மை தனியா விட்டுட மாட்டார். இயேசுவின் அந்த உண்மையான அன்பு அன்னிக்கு எனக்கு தெரியலை, புரியலை.

டைவர்ஸ் நோட்டீஸ்

என்னோட தங்கையும் அவ கணவரும் அடிக்கடி வந்து இவரைப் பார்த்து பேசுவா. ஆனா இவர் மனசு மாறல. நிலைமை கட்டுக்கடங்காம போகவே அவா இரண்டு பேரும் சேர்ந்து என்னை ஒரு வக்கீல்கிட்ட அழைச்சுண்டு போயி எனக்கு விவாகரத்துக்கான ஏற்பாடுகளை எல்லாம் செஞ்சா. எனக்கு மனப்பூர்வமா இதுல உடன்பாடு இல்லைன்னாலும் அவர் கிட்டேயிருந்தும் கடன்காரா கிட்டேருந்தும் ஒரு விடுதலை கிடைச்சாப்போறும்கிற ஒரு மனநிலையில நான் இருந்ததால அதுக்கு உடனே சம்மதிச்சேன். இனிமே எந்தக் கடன்காரங்க வந்தாலும் இந்த நோட்டீஸை காமிச்சா அவா உன்னை ஒண்ணும் பண்ணமாட்டான்னு வேற சொன்னா. நான் அந்த வீட்டை விட்டுட்டு என் தங்கை இருந்த இடத்துக்கு குடி போகப்போறேன்னு அம்மாகிட்ட சொன்னேன். அம்மா குழந்தைளைப் பார்த்துண்டு இருந்ததால நான் தூரபோறதை நினைச்சு ரொம்ப வேதனைப்பட்டா. என் தங்கைதான் எனக்கு உதவி பண்றான்னு தெரிஞ்சுடுத்து. அதனால இயேசுகிட்ட நெருங் கிடுவேனோன்ற பயமும் அவாளுக்கு இருந்தது. ஒருவேளை அப்படி நீயும் இயேசுவ வணங்கினா, அப்புறம் நான் உன் வீட்டு வாசலைக்கூட மிதிக்க மாட்டேன், உன் வீட்டிலே சாப்பிடவும் மாட்டேன். எனக்கும் உனக்கும் உறவே கிடையாது. ஏற்கெனவே

ஒருத்தி போயிட்டா எங்களோட மானத்தையெல்லாம் வாங்கிட்டு. நீயும் அவளோட சேர்ந்துடாதே. ஆனா ஒண்ணு சொல்றேன்: இயேசு இல்ல இந்த உலகத்தில எந்தக் கடவுளாலேயும் உன் புருஷன் திருந்த மாட்டான்... அப்போ நான் சொன்னேன்: எப்ப நீங்க என்னையும் குழந்தைகளையும் உங்ககூட வைச்சுக்க முடியாதோ, அப்போ நான் அவளோடயே போறேன். என்னால உங்களுக்கு இனி கஷ்டம் வேண்டாம். ஆண்டவர் சித்தம் எதுவோ அது நடக்கட்டும்னு சொன்னேன். ஆனா அவர் வீட்டை விட்டுப்போக சம்மதிக்கலை. என் தங்கையும் அவள் கணவரும் ரொம்ப அவரை கட்டாயப்படுத்தி உங்களால எங்க அக்கா பட்டது போதும்னு சொல்லி இரண்டு அடியாட்களை அழைச்சுண்டு வந்து அவரை வெளியே துரத்தினா. அப்புறம்தான் நான் அந்த வீட்டைக்காலி பண்ணினேன். நான் அந்த இடத்தை விட்டுட்டு என் தங்கை இருக்கும் இடத்துக்கு பக்கத்தில ஒரு தனி வீட்ல குடித்தனம் போனேன்..

மன அமைதி

நான் என் தங்கை வீட்டுக்கிட்ட இருந்தா அவ என் குழந்தைள ஸ்கூல்லேருந்து வரும்போது பாத்துக்குவேன்னு சொன்னதினால அங்கே போனேன். நான் வேலையிலிருந்து வந்து அவ வீட்டிலிருந்து குழந்தைகள கூட்டிண்டு போவேன். வீட்டுக்கு போனபின்னாடி கொஞ்ச நேரம் இயேசு கிட்ட மனசைத் திறந்து கதறுவேன். அப்போ மனசிலே ஒரு அமைதி தோணும். நான் தப்பு பண்ணிட்டேனோன்னு என் மனசாட்சி ஒரு சைடுல குத்தும். கேட்பார் பேச்சைக்கேட்டு அவரை விட்டுட்டேனோன்ற எண்ணமும் வரும். அப்போ நாம எந்த தப்பும் செய்யலை, அவர் படுத்தினபாடு தாங்க முடியாமத்தானே இப்படி செஞ்சோம்னு எனக்கு நானே சமாதானம் பண்ணிப்பேன். வேதத்தை படிக்க ஆரம்பிச்சேன். "பயப்படாதே நான் உன்னோடு இருக்கிறேன்" என்ற வார்த்தையை பார்த்தவுடனே மனசுலே என்னமோ பண்ணித்து. ஆண்டவர் செய்த அநேக அதிசயங்களை வேதத்தில படிக்க ஆரம்பிச்சபோது மனசுக்கு ரொம்ப ஆறுதலா இருந்தது. நமக்கும் இப்படி ஒருநாள் செய்வார்னு ஒரு நம்பிக்கை துளிர்விட்டது. ஆனா கூடவே என் எதிர்காலம் என்னஙற கேள்வியும் பூதாகாரமா எழுந்து நின்னுது. ஆனாலும் இப்போதைக்கு என் தங்கை இருக்கா குழந்தைகள பார்த்துக்க அப்படின்ற தைரியம் இருந்தது.

விக்கிரகத்துக்கு முடிவு

ஒரு நாள் என் தங்கை வெளில போயிருந்ததால நான் வேலையிலேருந்து ராத்திரி 8 மணிக்கு வீடு திரும்பினப்போ என் குழந்தைகள் ஸ்கூல் யூனிபாமைக்கூட கழட்டாம, ஒண்ணுமே சாப்பிடாம ரோட்டிலே விளையாடிண்டு இருந்தா. அதை பார்த்தவுடனே என் மனசு அப்படியே உடைஞ்சு போயிடுத்து. எனக்கும் என் குழந்தைளுக்கும் இந்த உலகத்தில யாருமே இல்லையேன்னு அழுதுண்டே அவாளை கூட்டிக்கொண்டு எங்க வீட்டுக்கு போனேன். உலகமே என்னைக் கைவிட்டது மாதிரி தெரிஞ்சது. செத்துப் போயிடலாமான்னு தோனித்து.

கதறிக் கதறி ஆண்டவர் இயேசுகிட்ட அழுதேன். நான் வாழவும் முடியலை சாகவும் முடியலை. தினமும் ராத்திரில குழந்தைகள் தூங்கினதுக்கப்புறம் இயேசுகிட்ட என் எண்ணங்களையும், வேதனைகளையும், பாரங்களையும் சொல்லிச்சொல்லி அழுவேன். நான் வடித்த கண்ணீரின் அளவு எவ்வளவு இருக்குமோ தெரியாது. அதே மாதிரி அன்னிக்கு ராத்திரியும் வேதத்தை படிச்சேன். அப்போ '**தன்னோட ஒரே பேரான குமாரனையும் நாம் செய்த பாவத்திற்கு பரிகாரமாகத் தந்தருளினார்னு**' அதுல எழுதினதை படிக்கும்போது என் மனசுலே அப்படியே ஆழமா பதிஞ்சிடுத்து. நமக்காக **பாவமே பண்ணாத தன்னோட உயிரைக்கூட குடுக்க** இந்த உலகத்தில ஒரு தெய்வம் உண்டா? அப்படின்னா இவரால ஏன் என் கணவரை திருத்த முடியாதுன்னு யோசிச்சேன். என் பிரச்சினை தீர ஒரேவழி இயேசுதான்னு நினைச்சேன். அவர் பண்ணின அற்புதங்களையெல்லாம் வேத புஸ்தகத்திலே படிச்சேன். குருடன் கண்ணை திறந்தது, செத்து கல்லறையில வெச்சு 4 நாள் ஆன லாசருவை எழுப்பினது, இப்படி எல்லாத்தையும் வேதப்புஸ்தகத்திலேருந்து படிச்சிண்டே இருந்தேன். பொழுது விடிஞ்சுடுத்து. அப்போ நான் ஒரு தீர்மானத்துக்கு வந்தேன். இனி எனக்கு இயேசு மட்டும் போறும். இந்த **இயேசு மட்டுமே எனக்காக யாவையும் செய்து முடிப்பார்னு** சொல்லி, எங்க வீட்ல இருந்த கேசட், CDs, சிலைகள் எல்லாத்தையும் எடுத்து ஒரு மரப் பெட்டியில வெச்சு இரண்டு தெரு தாண்டி நடமாட்டமே இல்லாத இடத்தில கொண்டுபோயி வெச்சிட்டு திரும்பி பார்க்காம வந்துட்டேன். எங்க வீட்ல விக்கிரகத்துக்குரிய அறிகுறி கூட இல்ல. அன்னிலேருந்து என் வாழ்க்கையில இயேசுமட்டுமே தெய்வம்னு நம்பிக்கையோட வாழ

ஆரம்பிச்சேன். மனிதர்கள் கைவிடலாம், உறவுகள் கைவிடலாம், ஆனால் இயேசு ஒருபோதும் கைவிடவே மாட்டார்ங்கிறதை அந்த நாள் முதல் நான் உணர ஆரம்பிச்சேன். ஏன்னா இயேசு நான் இந்த உலகத்தின் முடிவுமட்டும் எல்லா நாளும் உன்னோடு இருப்பேன்னு சொல்லியருக்காறே. தினமும் ராத்திரி கொஞ்ச நேரம் இயேசு கிட்ட பேசுவேன். என் பாரத்தையெல்லாம் இறக்கி வைப்பேன். என் மனசுலே முதல் தடவையா அது வரைக்கும் நான் அனுபவித்திராத ஒரு தெய்வீக சந்தோஷம், சமாதானம், நிம்மதி வந்தது.

ஜெபத்திற்கு பதில்

நான் தினமும் ஜெபிக்க ஆரம்பிச்சேன். நான் இப்படி இரக்கமில்லாம அவரை வீட்டைவிட்டே அனுப்பினது ரொம்ப தப்புன்னு என் மனசாட்சி உறுத்தினது. ஐயோ! இப்ப அவர் எந்த நிலைமையிலே இருக்காரோ தெரியலையேன்னு ரொம்ப வேதனை பட்டேன். ஆண்டவர் இயேசு ஒரு தப்பும் பண்ணாம நமக்காக உயிரையே குடுத்திருக்கிறப்ப நான் கேவலம் பணத்துக்காக அவர் மேல கொஞ்சங்கூட அன்பில்லாம, இரக்கமில்லாம நடந்துண்டதை நினைச்சு ரொம்ப அழுதேன். நம் ஜெபம் கேட்கப் படணும்னா முதல்ல அவர் செஞ்ச எல்லாத் தப்பையும் மன்னிக்கணும், மறக்கணும்னு நான் வேதம் வாசிக்கும் போது உணர்த்தப்பட்டேன். அதெப்படி முடியும்? அவரை பாரிக்கும்போதெல்லாம் அவர் செஞ்ச கொடுமைகள் தானே எனக்கு நினைவுக்கு வருது. அப்போ **'உன் இருதயத்திலே நீ கசப்பை வெச்சிண்டிருந்தால் உன் ஜெபம் கேட்கப்படமாட்டாதுன்னு'** மத்தேயு 5:23,24 மூலமா திட்டவட்டமா உணர்த்தினார். 'நீ உலகத்திலே அழிந்து போற பொருளுக்காக அவரைப் புறக்கணிச்ச... நானோ ஒரு பாவமும் செய்யாம இந்த உலக ஜனங்களின் பாவங்களுக்காக என் உயிரையே கொடுத்தேனே' அப்படின்னு உணர்த்தினார். உடனே நான் இனி அவர் வீட்டிற்கு வந்து எந்தப் பொருளை எடுத்துண்டு போனாலும் நான் அதைக்கேக்க மாட்டேன், அவர் மனந்திருந்தி ஆண்டவரோட பிள்ளையா மாறணும்னும், அப்படி அவர் மாறும்போது நாங்க குடும்பமா என் ஆண்டவருக்கு ஊழியம் செய்வோம்னும் ஒரு பொருத்தனை பண்ணினேன். அவர் திருந்தினா, என் கடன் அடைஞ்சா, நான் உங்களை தெய்வமா ஏத்துக்கறேன்னு நான் சொல்லலை. நான் உங்களை முழுசா நம்பறேன். உங்களால அவரை மாத்த முடியும்னு எனக்கு நம்பிக்கை இருக்கு. அதுவரைக்கும்

எனக்கு பொறுமையைக் குடுங்கோன்னு வேண்டிண்டேன். இதைப் படிக்கிற உங்களோடயும் இப்ப இயேசு பேசறார். நீங்களும் அவரண்டை வரணும், சந்தோஷமா இருக்கணும்னு அவருக்கு ஆசை.

இப்படி பொருத்தனைபண்ணி நான் தினமும் ஜெபிச்சுண்டிருந்தேன். என் குழந்தைளையும் அப்படியே ஜெபிக்க சொன்னேன். எந்த ஒரு நம்பிக்கைக்கு சாத்தியமான சூழ்நிலையுமே இல்லாத போதும் நான் இயேசு கிறஸ்துவை முழுமையாக நம்பினேன். இன்னும் நான் என்ன செய்யணும்னும், அவர் திருந்தி வரதுக்கு தடையான எல்லாக் காரியங்களையும் எடுத்துப் போடும்படியும் நான் ஜெபிச்சேன். அவர் இப்ப எங்கே இருந்தாலும் நீங்க அவரை தொடணும்னு ஜெபிச்சேன். கர்த்தர் சமீபத்திற்கும் தூரத்திற்கும் தேவன் என்பதை நிரூபித்துக் காட்டினார். நான் ஜெபிக்க ஜெபிக்க கர்த்தர் என் கணவரை சந்திக்க ஆரம்பிச்சார். நான் வேதத்தை மிகவும் நேசிச்சு படிக்க ஆரம்பிச்சேன். ஒவ்வொருநாள் ராத்திரியும் நான் அதிக நேரம் அவர் கிட்ட முழங்காலிட்டு அழுது கண்ணீர்விட்டு ஜெபிப்பேன். என் கணவர் திருந்தணும், நீங்கதான் உண்மை தெய்வம்னு இந்த உலகத்துக்கு நாங்க சொல்லணும்னு அழுது ஜெபிச்சேன். யாரெல்லாம் எங்களைக் கேவலமா நினைச்சாளோ அவாளுக்கு முன்னாடி நாங்க வாழ்ந்து காட்டணும்னு சொல்லி ஆண்டவர்கிட்ட அழுதேன். நாங்கள் பிரிஞ்சிருந்த அந்த வேளைல நான்பட்ட பாடு கொஞ்சநஞ்சமில்ல. எத்தனையோ சோதனையின் மத்தியிலும் இயேசு என்னை பரிசுத்தமாக வாழவைத்தார். **அவர் பரிசுத்தர். அவரை நம்பினோரை அவர் கைவிடுவதில்லை.**

கணவர் திருந்தினார்

அவர் வீட்டைவிட்டு தன் நண்பர்களை நம்பி போனதுக்கப்புறம் எல்லார்கிட்டேயும் கடன் வாங்கி அத்தனையையும் சூதாட்டத்திலே விட்டுட்டார். இனி பணமோ பொருளோ குடுக்கிறதுக்கு யாருமில்லைன்னும், வாங்கினவாளுக்கு திருப்பி குடுக்க இவருக்கு வழியில்லைன்னும் தெரிஞ்ச உடனே இவரோட சிநேகிதர்களே இவரை துரத்த ஆரம்பிச்சுட்டா. சீட்டாடறதுக்கு யார்யாரெல்லாம் பணம் குடுத்தாளோ, உதவி பண்ணாளோ அத்தனை வாசலையும் ஆண்டவர் அடைத்தார். அவா கண்ணுக்கு மறைஞ்சு வாழும்படியான ஒரு நிலை அவருக்கு உருவானது. கடைசியாக அவர் சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷன்ல இரண்டு நாட்கள் ஒரு டீ குடிக்க கூட பணம் இல்லாம, பசியோட உட்கார்ந்திருந்தாராம்.

எங்கேயாவது போயிடலாம்னு சொல்லி டிக்கெட் வாங்ககூட பணம் இல்லாம நெல்லூருக்கு ட்ரெயின் ஏறிப்போயி அங்கே காலங்கார்த்தால பிச்சைக்காரா படுத்துண்டிருக்கிறதையும், பிரயாணம் போறவா படுத்துண்டிருக்கிறதையும் பார்த்துப்ப "நான் இதிலே எந்த வகையை சேர்ந்தவன்னு" சிந்திச்சாராம். அப்போ **"உனக்கு இங்கே என்ன காரியம்?"** அப்டின்னு ஒரு சத்தம் அவர் மனசில கேட்டுதாம். யார் நம்மனோட பேசறான்னு அவரால புரிஞ்சுக்க முடியலை. என் கணவரை நீங்க சந்திக்கணும், அவரோட நீங்க பேசணும்னு நான் ஜெபிச்சதை என் ஆண்டவர் கேட்டார். பசி மயக்கத்ல அவரையும் அறியாமல் பக்கத்திலே இருந்த ஒரு கிறிஸ்தவ தேவாலயத்துக்குள்ள போய் தேவ செய்தியை கேட்டிருக்கார். அந்த ஆலயத்தின் போதகர் அவரை கூப்பிட்டு விசாரிச்சு அவருக்காக ஜெபிச்சு உன்னோடு பேசினது இயேசு கிறஸ்து, இந்த வார்த்தை வேதப்புஸ்தகத்ல இருக்கு. நீ தைரியமா இயேசுவை நம்பி போன்னு பிரயாணத்திற்கு பணத்தையும் கொடுத்து "நீ நேரா உன் வீட்டுக்குப் போ. உன் மனைவி கண்டிப்பா உன்னை ஏத்துக்குவா" அப்படின்னு சொல்லி அனுப்பினாராம். பாருங்க **இயேசு** எத்தனை நல்லவர்! **ஒருத்தரும் கெட்டுப்போறது அவருக்கு சித்தமேயில்லை.** நாம் வடிக்கிற கண்ணீரை இயேசு தம்முடைய துருத்தியில சேர்த்து வைச்சிருக்கிறார். ஏற்ற நேரத்தில அவர் நமக்கு பதில் கொடுப்பார். **ஒரு மனைவி ஜெபிக்கிற ஜெபத்திற்கு கட்டாயம் பதில் உண்டு.** இதைப்படிக்கிற நீங்க எந்த நிலைமையிலிருந்தாலும் நீங்க எதிர்பார்த்திருக்கிற விஷயத்ல இயேசு உங்களுக்கு ஒரு அற்புதம் செய்வார்னு நம்புங்க. மனம் தளராமல் ஜெபிங்க.

சந்தோஷம் வந்தது

அவர் ராத்திரி 8.30 மணிக்கு வீட்டுக்கு வந்தார். கதவைத்

தட்டினவுடனே நான் பயந்துபோய் இந்த வீட்டையும் எந்தக் கடன்காரனோ கண்டு பிடிச்சுட்டான்னு நினைச்சு மெதுவா திறந்தேன். இவர் நின்னுண்டு இருந்தார். எனக்கு ஒரே ஆச்சர்யம்! ஒரு நிமிஷம் பழசெல்லாம் நினவுக்கு வந்தது. இவரால தானே இந்த நிலைமை நமக்குன்னு தோனித்து. ஆனாலும் ஆண்டவர் நான் செஞ்ச பொருத்தனையை நியாபகப் படுத்தினதால உள்ள வாங்கோன்னு சொன்னேன். அவர் நினைச்சாராம்: இவ நம்மளை கண்டிப்பா உள்ள விடமாட்டா. எந்த முகத்தை வெச்சிண்டு இங்க வந்தீங்கன்னு கேட்பா. ஆனா நான் இயேசுவை நம்பி அவர்கிட்ட செஞ்ச பொருத்தனையிலே உறுதியா இருக்க இயேசு எனக்கு உதவி செஞ்சார். ஒரு பிச்சைக்காரனைவிட மோசமா பார்க்கிறதுக்கு பரிதாபமா அவர் இருந்தார்.

குழந்தைள கட்டிண்டு அழுதார். ஆண்டவர் அவரை சந்திச்ச விதத்தையும் அவர் திருந்தினதையும் சொன்னார். என் சந்தோஷத்துக்கு அளவே இல்லை. நான் ஆண்டவருக்கு மனசார நன்றி சொன்னேன். உலகத்திலே என்னைத் தவிர யாருமே எதிர்பார்த்திராத ஒரு அற்புதத்தை என் ஆண்டவர் எனக்கு செஞ்சிட்டார். **அவர் நம் இருதயத்தைக் காண்கிறவர்.** அன்று முதல் தினமும் அவர் விடியற்காலைல எழுந்து வேத புஸ்தகத்தை படிக்க ஆரம்பிச்சார். அவரிடம் இருந்த எல்லா கெட்ட பழக்கவழக்கங்களும் ஒவ்வொண்ணா மறைஞ்சுபோக ஆரம்பிச்சது. நான் வேலைக்கு போயிட்டு வீடு திரும்பினதும் எந்த ஒரு பொருளும் வீட்டிலிருந்து

காணாமல் போகல. ஆண்டவர் எங்கள் வாழ்க்கையில இழந்துபோன சந்தோஷத்தை திரும்பவும் குடுத்தார்.

கெட்ட பழக்கம் மறைந்தது

சில மாதங்கள் நிம்மதியா போச்சு. திடீர்னு ஒரு நாள் ராத்திரி என் கணவருக்கு கடன் குடுத்திருந்த ஒருத்தர் நாங்க இருந்த வீட்டை எப்படியோ கண்டுபிடிச்சு வந்துட்டார். அவர்கிட்ட வாங்கின கடனை விட மூணு மடங்கு நாங்க திருப்பி குடுத்திருந்தும் அவர் எல்லாத்தையும் வட்டிக்கணக்கில் வரவு வெச்சிட்டு திரும்பவும் அசல் 60,000 ரூபாயை உடனடியாக தரணும்னு மிரட்டினார். 'நாளைக்கு ராத்திரி வருவேன் பணம் தரலைன்னா நடக்கிறதே வேற, சாமான்களை எல்லாம் ரோடில வீசுவேன்'னு மிரட்டினார். உடனே நாங்க ரெண்டுபேரும் முட்டிபோட்டு ஆண்டவரிடத்தில் கேட்டோம். இயேசுவே... நாங்க எல்லாத்தையும் உங்ககிட்ட ஒப்படைச்சுட்டோம், இனி பழைய மனுஷனோட கெட்ட தொடர்பு எங்களுக்கு வேண்டாம், அவங்களை நீங்க ஆசீர்வதிங்க. இனி எங்க வீட்டுக்கு யாரும் வரக்கூடாதுன்னு அழுது ஜெபிச்சோம். அந்த நாள் முதற்கொண்டு எங்க வீட்டுக்கு ஒருத்தரும் வரலை. எனக்கு தெரியாம அவரை பின்தொடர்ந்த சிகரெட் பழக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவே இயேசு அந்த மனிதனை அனுப்பினார்னு அவர் சொன்னதுக்கு அப்புறம்தான் தெரிஞ்சுகிட்டேன். ஆண்டவர் எல்லாத்தையும் ஒரு நோக்கத்தோடே செய்கிறவர். அவர்கிட்ட நம்மளை முழுசா அர்ப்பணிச்சோமானா அவர் எல்லாத்தையும் பாத்துக்குவார்.

வைராக்கியத்திற்கு கிடைத்த பரிசு

நாங்க இரட்சிக்கப்பட்ட மறு வருஷத்தில (2002) ஆயுத பூஜை வந்துது. நாங்க பிராம்மணாளாய் இருந்தப்ப அந்த கம்பெனியில நான் அக்கவுண்ட்ஸ் மேனேஜரா வேலைக்கு சேர்ந்தேன். அதுக்கப்புறம்; ஒவ்வொரு வருஷமும் அந்த பூஜையிலே நான் கலந்துண்டு எல்லா ஸ்லோகங்களையும் சொல்லுவேன். ஆனா ஆண்டவரை தெய்வமாக ஏத்துண்டதுக்கப்புறம் விக்கிரகத்தை வழிபட எனக்கு விருப்பம் இல்லை. அதனால என் முதலாளியிடம் நான் பூஜைக்கு வரலைன்னு சொல்லிட்டேன். அவருக்கு பயங்கரமா கோவம் வந்துடுத்து. இத்தனை வருஷம் பூஜையிலே கலந்துண்ட நீங்க, இப்போ ஏன் வர மாட்டேங்கிறீங்கன்னு கேட்டார். எனக்கு நம்பிக்கை

இல்லைன்னு சொன்னேன். நீங்க பூஜையிலே கலந்துக்கலைன்னா உங்க வேலையே பறிபோகவேண்டிய ஒரு சூழ்நிலை வரும்னு சொன்னார். ஆனாலும் நான் அந்த பூஜையிலே கலந்துக்கலை. என் வேலை முக்கியம்னு எனக்கு தெரியும், ஆனாலும் அதைவிட என் இயேசுதான்; எனக்கு ரொம்ப முக்கியம். அவருக்கு பிடிக்காததை நான் ஒருநாளும் செய்யமாட்டேன். வேதத்திலே **"விக்கிரக ஆராதனை தேவனுக்கு விரோதமான பகை"**ன்னு எழுதியிருக்கே.

அடுத்த நாள் பூஜையிலே கலந்துண்டவா கிட்ட என் முதலாளி பேசும்போது அவா 'நான் இயேசுவை ஏத்துண்டதால பூஜையிலே கலந்துக்கலைன்னு' அவர்கிட்ட சொல்லிட்டா. அவர் என்னை வேலையை விட்டே எடுத்துடணும்னு தீர்மானிச்சுட்டார். ஆனா அடுத்த வாரம் எங்க ஆபீஸ்ல ஆடிட் நடக்கவேண்டி இருந்ததால அதுவரைக்கும் யாரும் இந்த விஷயத்தை அவங்ககிட்ட சொல்லக்கூடாதுன்னு கண்டிப்பா சொல்லியிருக்கார். எல்லாரும் கூடி நன்னா பேசிண்டிருப்பா. நான் உள்ளே வரும்போது பேச்சை உடனே நிறுத்திடுவா. ஒருத்தருமே எங்கிட்ட பேசறதில்லை.

ஆடிட் முடிஞ்சது. எனக்கு கீழே வேலைபார்த்த ஒரு பொண்ணு என்கிட்ட வந்து மனசு கேக்காம நடந்ததையெல்லாம் சொன்னதோட தயவுசெஞ்சு வேற ஒரு வேலையை தேடிக்கோங்க, இல்லைன்னா நீங்க பூஜைல இனிமே கலந்துக்கோங்கன்னு சொன்னா. நான் அதுக்கு பதிலா: 'என் வேலையிலே ஏதாவது குறை இருக்குன்னு சொன்னா அதை நிரூபிக்காமல் நான் போகமாட்டேன். என் வாழ்க்கையையே சரிபண்ண என் இயேசுவுக்கு ஒரு வேலை வாங்கித் தருவதா கஷ்டம்? ஆனா, விக்கிரகத்தை வழிபட இனியும் என்னால முடியாது'. இதை நீ போய் முதலாளிகிட்ட வேணும்னாலும் சொல்லுன்னு சொன்னேன். அன்னிக்கு ராத்திரி நானும் என் கணவரும் சேர்ந்து ஜெபம் பண்ணினோம். "கர்த்தாவே! எங்க வாழ்க்கையை திரும்ப சேர்த்து வெச்ச உங்களுக்கு ஒரு வேலையை வாங்கித் தர்றது ரொம்பவும் லேசான காரியம். உமக்கு சித்தமானால் என்னை இந்த வேலையிலேயே தொடரச் செய்யும், இல்லைன்னா எனக்கு வேற ஒரு வேலை வாங்கித்தாரும்"னு ஜெபிச்சோம்.

சில நாட்கள் கழிச்சு என் காதுக்கு வந்த செய்தி: முதலாளி சொன்னாராம்: "அது அவங்க சொந்த விஷயம், நாம அதிலே தலையிட வேண்டாம், வேலையிலே அவங்க சரியாக இருக்காங்க.

அப்படி ஒருத்தர் நமக்கு கிடைக்கிறது ரொம்ப கஷ்டம்". பாருங்க! இயேசு எல்லாருடனும் பேசுவார். அவருக்கு பட்சபாதம் இல்லை. அவர் என் முதலாளியிடம் என்ன பேசினாரோ தெரியாது, அத்தனை கோவமா, வைராக்கியமா இருந்த அவரை மாத்த இயேசுவால மட்டுமே முடிஞ்சது. நீங்களும் இயேசுவிடம் வைராக்கிமாய் இருந்து விக்கிரகத்தை விட்டு விலகினா அவர் உங்களுக்கும் அற்புதம் செய்வார்.

வேலையில் உயர்வு

அந்த நாளுக்கப்புறம் என் வேலையில எனக்கு அதிக ஆசீர்வாதம் கிடைச்சுது. எனக்கு ஒரு தனி அறை A/c வசதியுடன் குடுத்தார். அந்த அறையிலே ஒரு கம்யூட்டர், தொலைபேசி, இன்டர்நெட், செல்போன் இவ்வளவும் கொடுத்தார். அடுத்த வருஷம் ஆடிட் வந்த போது நான் மும்பைக்கு செல்ல வேண்டியிருந்தது. மத்தவங்களுக்கு ரெயில் பயணம், எனக்கோ விமானப் பயணம். ஜம்முன்னு பறந்து போய் வேலையை முடிச்சுட்டு வந்தேன். இயேசு செய்த அற்புதத்திற்கு அளவே இல்லை. அந்த நாளிலிருந்து எங்க வாழ்க்கையில தொடா;ந்து முன்னேற்றம்தான். **அவரை நோக்கி பார்த்த முகங்கள் ஒரு போதும் வெட்கப்பட்டு போவதில்லையே!**

எதிர்பாராத ஆசிர்வாதம்

2002 ஆம் வருஷத்தி லேருந்து நான் சின்ன பசங்களுக்கு ஞாயிறு பள்ளி எடுக்க ஆரம் பிச்சேன். நிறைய பசங்க வீட்டுக்கு வருவாங்க. எனக்கு சின்ன பசங்களை குறிச்ச பாரம் உண்டு. ஒவ்வொரு பிள்ளைக்கு பிறந்த நாள் வரும்போதும் நான் பணமும் ஏதாவது ஒரு பரிசுப் பொருளும் குடுக்கறது வழக்கம். மார்ச் மாதம் 31ஆம் தேதி 2003ஆம் வருஷம் எங்கிட்ட வெறும் 40 ரூபாய் மட்டுமே இருந்தது. அதை வெச்சுண்டு இரண்டு நாட்கள் செலவுகளைச் சமாளிக்கணும். அன்னிக்கு கார்த்தால 9 மணிக்கு பக்கத்து வீட்டு பையன் எனக்கு பிறந்தநாள்னு சொல்லிண்டு அவா அம்மாவோட சாக்லேட் எடுத்துண்டு வந்தான். எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை. முன்னாடியே தெரிஞ்சிருந்தா நன்னா இருந்திருக்குமேன்னு சும்மா சொல்லி வெறும் பரிசுப் பொருளை மாத்திரம் குடுத்து பணம் ஏதும் குடுக்காம ஜெபிச்சு அனுப்பிட்டேன். அப்புறம் 20 நிமிடங்கள் அழுது ஆண்டவரிடத்தில் மன்னிப்பு கேட்டேன். நான் வீண் செலவு ஏதும் செஞ்சிருந்தால் என்னை மன்னியும். அவாளுக்கு குடுக்க எங்கிட்ட ஒண்ணும் இல்லை.

நான் கடன் வாங்கக்கூடாதுன்னு தீர்மானம் பண்ணியிருந்ததால என் ஆபீஸ்லேயும் முன்பணம் கேட்க மனசில்லை. **"நீ அநேக ஜாதிகளுக்குக் கடன் கொடுப்பாய், நீயோ கடன் வாங்காதிருப்பாய்"** (உபா:28:12) என்ற வசனத்தின்படி நான் கடன் வாங்கக்கூடாதுன்னு பொருத்தனை பண்ணியிருந்தேன். நான் இப்படி ஜெபிச்சுட்டு வேலைக்கு போனேன். அங்கே என் முதலாளி என்னை கூப்பிட்டு கார்த்தால 9.30 மணிக்கு எனக்கு ஒரு எண்ணம் வந்தது. நம்ம ஆபீஸ்லே வேலை செய்யற எல்லாருக்கும் நான் ஏதாவது பணம் கொடுக்கணும்னு நினைக்கிறேன்னார். எங்களுக்கு பாக்கி எதுவும் இல்லை. அதுவும் இல்லாம சாதாரணமா மார்ச் 31ந்தேதி எந்த ஆபிஸிலேயும் தேவையில்லாம செலவு பண்ண மாட்டா. அப்படி அவர் சொன்னவுடன் நான் ஆண்டவருக்கு நன்றி சொன்னேன். என்னுடைய ஜெபம் கேட்கப்பட்டதை நினைச்சு சந்தோஷப்பட்டேன்.

ஆனா என் முதலாளி அன்னிக்கு வெளியே போயிட்டு சாயங்காலம் 3.45 வரைக்கும் திரும்பி வரவே இல்லை. நமக்கு ஒரு ஆசீர்வாதம் வரும்போது பிசாசு எப்படியாவது அதை தடுப்பான். ஆதனால **தடைகளை உடைத்தெறிகிற கர்த்தர் எனக்கு முன்பாக செல்லும்படி** (மீகா:213) ஜெபிச்சேன். என் முதலாளி சரியா சாயங்காலம் 3.50க்கு வந்தார். உடனே என்னை கூப்பிட்டு

'நான் வரும்போதே பாங்க் மேனேஜரிடம் ஒரு 10 நிமிஷம் கணக்கு முடிக்காம இருக்கச் சொல்லியிருக்கேன்'. அதை நான் பார்த்துக்கறேன்னு சொன்னார். அப்புறம் என்ன நடந்ததுன்னு எனக்கு தெரியாது. சாயங்காலம் 6 மணிக்கு எல்லாரையும் கூப்பிட்டார். எல்லாருக்கும் 3000 ரூபாய் செக் கொடுத்தார். ஆனா எனக்கு மட்டும் 3000 ரூபாய் செக்கும், 1500 ரூபாய் பணம் ரொக்கமாகவும் கொடுத்தார். நான் பணம் வேணும்னு இயேசுவிடம் கேட்கலை. ஒரு ஏழைக்கு உதவ என்னால முடியலையேன்னு வருந்தினேன். நான் கடன் வாங்கமாட்டேன்னு பொருத்தனை பண்ணினதனால அன்னிக்கு சாயங்காலமே எனக்கு வாசலைத் திறந்தார். அன்னிக்கு ராத்திரி வேலையை விட்டு திரும்பினதும் முதல்ல அந்த பையனை கூப்பிட்டு அவனுக்கு பணம் குடுத்தேன். இன்னிக்கு எங்க கடனையெல்லாம் இயேசு அடைச்சுட்டார்.

கடன் தொல்லையில் மாட்டிண்டிருக்கிற நீங்க யாராயிருந்தாலும், இனி கடன் வாங்க மாட்டேன்னு ஒரு பொருத்தனை பண்ணுங்க. அந்த பொருத்தனையை எந்த சூழ்நிலையிலும் கடைபிடிங்க. ஏழை எளியவர்களுக்கு உதவி செய்யுங்க. குறிப்பா படிக்கிற குழந்தைகளுக்கு உதவி செய்யுங்க. கர்த்தர் உங்களுக்கும் அதிசயம் செய்வார்.

ஊழிய அழைப்பு

2004ல் கர்த்தர் எங்களுக்கு ஊழியத்தை குடுத்தார். அன்னிலேருந்து கர்த்தர் அநேக அற்புதங்களை செஞ்சிண்டு

வந்துண்டிருக்கார். நாங்க குடும்பமா பல சபைகளுக்கு போய் ஆண்டவர் இயேசு செய்த நன்மைகளை சாட்சியாகவும், ஆண்டவரின் வார்த்தைகளை செய்தியாகவும் சொல்லி அவர் நாமத்தை மகிமைப்படுத்திண்டு வந்துண்டிருக்கோம்.

இறந்த குழந்தை பிழைத்தது

ஒரு நாள் சென்னை எக்மோர் குழந்தைகள் மருத்துவமனை யிலேந்து ஒரு சகோதரி எங்களோட பேசி என் அக்காவோட குழந்தை ரொம்பவும் மோசமான நிலையில இருக்கு. நீங்க வந்து குழந்தைக்காக ஜெபிப்பீங்களான்னு கேட்டா. அதுக்கு என் கணவர் உடனே வரேன்னு சொல்லி, ஆண்டவரிடத்தில ஜெபிச்சுட்டு போனார். அந்த இடத்துக்கு போய் பார்த்தபோது அந்த குழந்தை இறந்து கிடந்தது. அப்போ என் கணவர் அந்த சகோதரியை பார்த்து, **"கர்த்தரைத் தேடுபவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாது"** (சங்கீதம்:34:10) என்ற வேத வசனத்தை சொன்னார். பிறகு மருத்துவரை பார்த்து இந்தக் குழந்தைக்கு என்ன நோய் இருந்ததுன்னு கேட்டார். அதுக்கு அந்த மருத்துவர், "இந்த குழந்தைக்கு - பிறக்கும் போதே மஞ்சள்காமாலையும், Typhoid–ம், பிட்ஸ்ம் (fits) இருந்தது. அதனால குழந்தையின் மூளை பாதிக்கப்பட்டுது. நாங்க எவ்வளவோ முயன்றும் குழந்தையை காப்பாத்த முடியலைன்னு சொல்லிட்டு உடனே அவங்களை வீட்டுக்கு அனுப்பும்படியும் சொன்னார். என் கணவர் அந்த சகோதரியை பார்த்து 'இயேசுவை நம்புங்க, விசுவாசத்தோடு ஆண்டவரிடத்தில் என் பிள்ளைக்கு உயிர் கொடுங்கன்னு' கேட்கச்சொன்னார். என் கணவர் குழந்தையின் மார்பிலே கையை வெச்சு இயேசுவின் நாமத்தினாலே ஜெபித்தார். உடனே அந்தக் குழந்தையின் கையும் காலும் துடிக்க ஆரம்பிச்சுடுத்து. டாக்டர், நர்ஸ், ஆஸ்பத்திரியில இருந்த பலருக்கும் ஆச்சர்யமான ஆச்சர்யம். அந்தக் குடும்பம் முழுசும் இப்போ ஆண்டவர் இயேசுவை ஏத்துண்டிருக்கா. கர்த்தர் அதிசயம் செய்த அந்தக் குடும்பத்தினர் முஸ்லிம் இனத்தை சேர்ந்தவர்கள். கர்த்தர் யாவருக்கும் அற்புதம் செய்கிறவர். அவரிடத்தில் பட்சபாதம் இல்லை.

பைத்தியம் தெளிந்தது

ஒருதடவை ஆற்காடு பகுதியிலே ஊழியத்துக்கு போயிருந்தப்ப ஒரு சபையிலே புத்தி சுவாதீனம் இல்லாத ஒரு வாலிபனுக்காக

ஜெபிக்க கூட்டிக்கொண்டு வந்தா. அவன் பெரிய கொம்பைக் கொண்டு வந்து சுவத்தை இடிப்பான். இயேசுவின் நாமத்தினாலே ஜெபித்தபோது அந்த நிமிஷமே அவன் விடுதலையாக்கப்பட்டான். அடுத்த வாரம் அந்த சபையின் போதகர் எங்களிடம் அந்த வாலிபன் பூர்ணமா விடுதலை அடைஞ்சுட்டான்னும், காலையில் அவரிடம் சபையின் சாவியை வாங்கித்திறந்து சுத்தம் செய்ததாகவும் சொன்னார். **உன்னை அதிசயங்களைக் காணப்பண்ணுவேன்** என்று சொன்ன கர்த்தர் ஆற்காடு பகுதியிலே அதிசயத்தை செய்தார். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

பிரிந்த குடும்பம் இணைந்தது

ஒரு நாள் கார்த்தால 6 மணிக்கு மோகன் என்பவர் என் கணவருக்கு போன் பண்ணி அவர் மூணு நாளா வீட்டுக்கு போகலைன்னும் வாழ்க்கை விரக்தியில உயிரை மாய்த்து கொள்ள வாம்னும் சென்னை பெருங்களத்தூர் இரயில்வே கேட் அருகே உள்ள தண்டவாளத்தில் தலையை வெச்சப்ப, அவருடைய இருதயத்திலிருந்து ஒரு குரல் பாஸ்டர் ராஜாவிற்கு போன் செய்யின்னு ஒலித்ததுன்னும், அதுக்குதான் போன் பண்ணிணதாகவும் சொன்னார். அதற்கு என் கணவர் உடனே ரொம்ப கிட்ட இருக்கிற சென்னை குரோம்பேட்டை பஸ் ஸ்டாப்பிற்கு வரச்சொன்னார். பிறகு அவரை வீட்டுக்கு கூட்டிக்கொண்டு வந்து அவரிடம் கேட்டபோது அவர் குடிப்பழக்கத்தின் வெறியால் வீட்டிலிருந்த எல்லா பொருளையும் அடமானம் வெச்சதோடு அவர்

மகன் செல் போனையும் வித்துட்டதால மகனுக்கு பயந்து இப்படி வந்ததாகவும், அவருக்காக ஜெபம் செய்யவும் சொன்னார்.

மோகனுடைய மனைவி எங்கள் வீட்டின் அருகில் வேலை செய்து வந்ததால் அவர்களையும் வரவழைத்து இருவருக்காகவும் ஜெபித்தபோது ஆண்டவர் 1கொரி.13:7 வசனத்தை கொடுத்தார். அந்த வசனத்தில் **'அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்'** என்று இருந்தது. அந்த வார்த்தையின் மூலம் இருவரும் தொடப்பட்டு வேறுவேறு திசையிலிருந்து வந்தவர்கள் கைகோர்த்துக் கொண்டு சமாதானமா வீட்டுக்கு திரும்பி போனாங்க. இயேசு அதிசயங்களை செய்பவர் என்பதை நாளுக்கு நாள் காண்பித்து கொண்டே வருகிறார்.

கொடிய வியாதியிலிருந்து விடுதலை

ஆற்காடு பகுதியிலே என் கணவர் வழக்கமாக ஊழியத்திற்கு போகும் போது ஒரு வீட்டில தங்குவார். ஒரு முறை அப்படி போயிருந்தப்ப அந்த வீட்டு சொந்தக்காரர் ரொம்ப சோர்ந்து படுக்கையிலே படுத்துண்டிருந்தார். என்னன்னு கேட்டப்ப அவருக்கு இருந்த கொடிய வியாதியால் சிறுநீர் இரத்தமாக போறது. தண்ணி குடிச்சாக்கூட வாந்தி எடுத்துடறார். அதனால ரொம்ப பலவீனமடைந்து நடக்கக்கூட முடியாம படுத்துண்டிருக்கார்னு சொன்னாங்க. அன்னிக்கு மதியம் சென்னையிலுள்ள ஒரு மருத்துவமனையில சேருவதற்கான எல்லா ஏற்பாடுகளையும்

அவங்க செத்திருந்தாங்க. அவர் இயேசுவை அறியாத குடும்பத்தை சேர்ந்தவர். கர்த்தர் என் கணவரிடம்: 'நீ போய் அவரை இங்கே அழைத்து வரச்சொல். என்னுடைய நாமத்தினாலே ஜெபிக்கும் போது நான் சுகம் தருவேன்..' அப்படின்னார். என் கணவர் அந்த வீட்டாரிடம் சொன்னப்ப, அவரை ஜெபிக்க கூப்பிட்டா கண்டிப்பா எங்களை இந்த வீட்டைவிட்டு காலி பண்ண சொல்லிடுவார்னு அந்த வீட்டார் பயந்தார்கள். ஆனாலும் என் கணவர் மிகவும் வற்புறுத்தி நீங்க போய் அவரை கூப்பிடுங்க, அவர் நிச்சயம் ஒண்ணும் மறுப்பு சொல்லாம வருவார் என்றார்.

அப்படியே அந்த வீட்டின் சொந்தக்காரர் ஜெபிக்க வந்தப்ப என் கணவர் இயேசுவை பத்தி அவர்கிட்ட சொல்லி நீங்க ஆண்டவரை முழு இருதயத்தோட நூற்றுக்கு நூறு நம்பினா அவரால அற்புதம் செய்ய முடியும்னு சொல்லி ஜெபிச்சார். ஜெபம் பண்ணின பின்னாடி 'அந்த மனிதர் வீட்டுக்கு போய் அவருக்கு பிடிச்ச உணவை ரொம்ப நாளைக்கப்புறம் நல்லா சாப்பிட்டார். ஆனா சில மணி நேரத்திற்குள்ளேயே அவருக்கு அதே பிரச்சினை திரும்பவும் வந்ததுமில்லாம, அவர் மனைவிக்கும் அதே பிரச்சினை ஆரம்பிச்சது. இரண்டுபேரும் வலியால துடிச்சாங்க. எந்தெந்த தெய்வங்களின் பெயரையெல்லாமோ சொல்லி கூப்பிட்டாங்க. ஒண்ணும் சரியாகலை. அப்புறம் அந்த போதகர் சொன்ன இயேசுவை கூப்பிட்டா என்னன்னு நினைச்சு 'இயேசுவே என்னைக் காப்பாத்துங்க, நான் உங்களை முழுமனசோட நம்பறேன்னு

கதறினார். என்ன ஆச்சர்யம்! அந்த நிமிஷமே அவருக்கும் அவர் மனைவிக்கும் பரிபூரண சுகம் கிடைச்சது. இயேசுவுக்கே மகிமை!!!

மூட்டு வலி நீங்கியது

எனக்கு ஒரு தடவை வலதுகால் முட்டி ரொம்ப பெரிசா வீங்கிடுத்து. என்னால நடக்கவோ உட்காரவோ முடியலை. வலியும் தாங்க முடியாததால டாக்டர்கிட்ட போலாம்னு தீர்மானிச்சு நானும் அவரும் போனோம். அப்போ சில டெஸ்ட்டெல்லாம் எடுத்துப் பார்த்துட்டு கடைசியில உங்க ளுக்கு முடக்கு வாத பிரச்சினை இருக்கு. இது இப்படியே தொடர்ந்தா உங்களுக்கு கையும் காலும் சேர்ந்து ஒரே நேரத்தில செயலிழந்து போகவும் வாய்ப்பு இருக்குன்னு டாக்டர் சொல்லிட்டா. எனக்கு ஒரே பயம் வந்துடுத்து. ஐயோ நான் என்ன பண்ணுவேன்னு சொல்லி ரொம்பவும் அழுதேன். சில மருந்துகள் கொடுத்து இதை தொடர்ந்து சாப்பிடணும்னு சொன்னா. அப்படி தொடர்ந்து சாப்பிட்டாலும் வலி கொஞ்சமும் குறையல. என்னால பாத்ரூம்லகூட உட்காரகூட முடியல. அப்போ என் ஆத்துக்காரர் என்னை உபவாசம் இருந்து ஜெபிச்சா எல்லாம் சரியாயிடும்னு சொன்னார். அதேமாதிரி நான் உபவாசம் இருந்து ஆண்டவர் கிட்ட ஜெபிச்சேன். மறுநாள் கார்த்தால நான் எழுந்திருக்கும்போது என்கால் வீக்கம் வலியெல்லாம் மறைஞ்சு பழைய நிலைமைக்கு வந்துடுத்து. என் ஜெபத்துக்கு உடனேயே பதில் குடுத்தார் இயேசு. இதேமாதிரி இதை படிக்கிற உங்களுக்கும் கூட எந்த பிரச்சினை இருந்தாலும் நீங்க அவர்மேல நம்பிக்கையோட பிரார்த்தனை பண்ணிணா அதை உடனே தீர்த்துவைக்க இயேசுவால மட்டும்தான் முடியும். அவரை நம்புங்க. அவர் உங்களை வாழ வைக்கும் அற்புதமான தெய்வம்.

கால்களை செயல்படவைத்த இயேசு

என் கணவர் வின் டி.வியில எங்களுடைய ஊழியத்தின் நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி கொண்டிருந்தபோது ஒரு மாசத்தில

கர்த்தர் எரேமியா32:27ல் உள்ள "என்னால் செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுண்டோ?" என்ற வார்த்தையை கொடுத்திருந்தார். அந்த நிகழ்ச்சி ஒளிபரப்பான மறுநாள் சேலம் பகுதியிலிருந்து கிருஷ்ணன் என்ற ஒரு சகோதரர், எங்களை தொலைபேசியின் மூலமாய் தொடர்பு கொண்டு இயேசு செய்த அற்புதத்தை விவரித்தார். அவருடைய இரண்டு கால்களும் செய லிழந்து போனதாகவும், எல்லா வேலைகளையும் தவழ்ந்து கொண்டுதான் செய்ய முடிந்ததாகவும், வைத்தியத்திற்காக நிறைய பணம் செலவழித்தும் எந்தப் பலனும் கிடைக்காத நிலையில இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியை பார்த்தபோது இயேசுவிடம் நம்பிக்கையோட எங்களோடு சேர்ந்து அவரும் ஜெபிச்சாராம். அந்த நிகழ்ச்சி முடிந்த போது அவருடைய இரண்டு கால்களும் செயல்பட ஆரம்பித்ததாம். **உண்மையாய் அவரிடத்தில் விசுவாசம் வைத்து ஜெபிக்கிற ஜெபத்திற்கு நிச்சயமாக பதில் கொடுப்பாரே நம் ஆண்டவர்.**

படிப்பில் அற்புதம்

என் மகன் பத்தாம் வகுப்பு படிச்சுண்டிருந்தப்ப அவனுக்கு கணக்கு பாடம் சரியா வராது. கடைசி ரிவிஷன் டெஸ்ட் வரையில் மிகவும் குறைவான மார்க் தான் எடுத்தான். அவன் பாஸ் பண்ணுவானான்னே நாங்க ரொம்பவும் பயந்துண்டு இருந்தோம். அப்போ ஒரு நாள் இயேசு எங்களிடம்: "நீ உன் மகன் தலையில கைவைத்து தினமும் ஜெபம் பண்ணு. அவனையும் ஜெபம் பண்ணிட்டு படிக்கச்சொல், நான் அதிசயம் செய்வேன்" அப்படின்னார். அதிலேருந்து அவன் ஜெபம் பண்ணிட்டு படிக்க ஆரம்பிச்சான். பொதுத்தேர்வு எழுதும்போதும் வினாத்தாள் வாங்கினவுடனே ஜெபம் பண்ணிட்டு எழுத தொடங்கினான்.

கர்த்தர் அவனுக்கு 83% மதிப்பெண் எடுக்க உதவி செய்தார். அந்த நாளிலிருந்து இன்றுவரை என் மகன் ஜெபம் செய்துவிட்டுத்தான் படிக்க ஆரம்பிக்கிறான்.

சூனியக்கட்டு உடைந்தது

கர்த்தர் எங்கள் வாழ்க் கையிலே செய்த இந்த நன்மையை சாட்சியாக நாங்கள் ஒரு DVD போட்டிருக்கிறோம். ஒரு சகோதரி அதை வாங்கி வீட்ல போட்டு பார்த்தபோது அவங்க ரொம்ப வருஷமா வயித்தில வலியோட அவஸ்தை பட்டுண்டிருந்தாங்களாம். அதை பார்த்தவுடனே அவங் களுக்கு வாந்தி வந்ததாம். போய் வாந்தி எடுத்துட்டு வந்தாங்க. திரும்பவும் DVDயைப் பார்த்தாங்களாம். அப்போது வாந்தியும் பேதியும் சோ;ந்து வந்ததாம். இப்படி அதே நாளிலே 4 முறை அந்த DVDயைத் தொடர்ந்து போட்டு பார்த்தாங்களாம். சூனியக் கட்டிலே பல வருஷங்களா மாட்டிண்டு இருந்த அந்த சகோதரி அது எல்லாமே இப்போ நீங்கி பரிபூரண சுகம் அடைஞ்சதா சாட்சி சொன்னா. இப்படி ஆண்டவர் செஞ்ச அநேக அதிசய அற்புதங்களை சொல்லிண்டே போகலாம். பிராமண குலத்தில் பிறந்து எந்த விதத்திலேயும் ஆண்டவரோட சம்பந்தம் இல்லாத இருந்த எங்கள்ளக் கொண்டே இயேசுவால் இத்தனை அற்புத அதிசயங்களை செய்ய முடியுமானால், உங்களைக்கொண்டு செய்வது அவருக்கு மிகவும் லேசான காரியம் இல்லையா? **'உண்மையாய் தம்மை நோக்கி கூப்பிடுகிற யாவருக்கும் அவர் சமீபமாய் இருக்கிறார்'. (சங்கீதம்.145:18)**

தற்கொலை எண்ணம் மாறியது

ஒருமுறை ஆரணியில் இருக்கிற ஒரு கிராமத்திலிருந்து கோபி என்ற ஒரு வாலிபன் என் கணவரை போனிலே கூப்பிட்டு என் கையிலே விஷ பாட்டிலை வெச்சிருக்கேன். நான் இதை குடிச்சுட்டு சாகப்போறேன். எங்கள் கிராமத்திலிருந்து 5 கிலோ

மீட்டர் தள்ளி ஆள் நடமாட்டம் இல்லாத ஒரு இடத்தில ஒரு பாழும் கிணத்துக்கு பக்கத்தில நான் நின்னுகிட்டு இருக்கேன், எனக்கு வாழ பிடிக்கல, நான் சாகிறதுக்கு தீர்மானம் பண்ணிட்டேன்னு சொன்னார்.

கடைசியா உங்களுக்கு ஒரு போன் பண்ணிட்டு என் கையிலே இருக்கிற விஷத்தை குடிக்கலாம்னு எனக்கு ஒரு எண்ணம் வந்ததுன்னு சொன்னார். அதற்கு என் கணவர் நீ எடுத்திருக்கிற" முடிவு உனக்கு நல்லதா தோணலாம், ஆனா உனக்கு இருக்கிற பிரச்சனையை விட இயேசு பெரியவர், அவர்கிட்ட எல்லாத்தையும் நம்பிக்கையோட சொல்லுன்னு சொல்லி இயேசுவின் நாமத்தினாலே அவருக்காக ஜெபிச்சதும் அவருக்கு இருந்த அந்த தற்கொலை எண்ணம் மாறி வாழணும்ற ஆசை



வந்தது. இன்று அவர் ஞானஸ்நானம் எடுத்து கர்த்தருக்குள் ஒரு சாட்சியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

கட்டி மறைந்தது

சில மாதங்களாக என் வலது மார்பு பகுதியிலே ஒரு கோலி குண்டு அளவு கட்டி இருந்தது. அதோட வலி நாளுக்கு நாள் அதிகாரிச்சுண்டே இருந்தது. என்னால சோப்பு போட்டுகூட குளிக்க முடியலை. தவறி நான் எதிலேயாவது இடிச்சுண்டாபோதும் உயிரே போறமாதிரி அப்படி ஒரு வலி. உடனே கண்ணீர் வந்துடும். அதுக்காக நான் ஆண்டவரிடம் தினமும் ஜெபிச்சேன். எங்கே அது கேன்சராக மாறிவிடுமோங்ற பயம் இருந்தது. ஒரு நாள் ராத்திரி நேரத்தில ஜெபிச்சுண்டிருக்கும்போது, ஆவியானவர் எனக்கு செய்த நன்மைகளை, இரட்சிப்பை சாட்சி புத்தகமாக வெளியிடணும்னு என் இருதயத்தில பேசினார். மேலும், அந்த சாட்சி புத்தகம் வெளியிடும் நாளில் உன் கட்டி மறைஞ்சிடும்னு தெளிவா சொன்னார். எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது. நான் உடனே என் கணவரிடத்தில் இதைச்சொல்லி, சாட்சி புத்தகம் வெளியிட தேவையான செய்திகளை கம்பியூட்டரில் அடிக்க ஆரம்பிச்சுட்டேன். தொடர்ந்து நாலு நாளா ராத்திரி ரொம்ப நேரம் வரைக்கும் நான் கம்பியூட்டரில் அடிச்சுண்டே இருந்தேன். என்ன ஆச்சரியம்! நான் புஸ்தகத்தை முழுசா முடிக்கும் முன்னாடியே அந்தக்கட்டி தானா மறைஞ்சுடுத்து. அல்லேலூயா!

நீங்க படிக்கிற இந்த புஸ்தகம் தான் அது. இந்த சாட்சி புஸ்தகத்தின் மூலம் அநேக உள்ளங்கள் தொடப்படவும், அவர்கள் பிரச்சிலனைகள் மற்றும் வியாதிகள் நீங்கவும் நான் ஜெபிக்கிறேன். முதலாவது கர்த்தர் எனக்கு அற்புதம் செய்து அதை சாட்சியாக எழுதவும் கிருபை செய்தார். இதை படிக்கிற உங்களுக்கும் ஒரு அற்புதம் செய்வார். ஆண்டவருடைய நாமத்திற்கே மகிமை உண்டாகட்டும். நீங்களும் அவர்கிட்ட மனம்விட்டு சொல்லுங்க. உங்கள் நோய்நொடிகள், பலவீனங்கள், பிசாசின் கட்டுகள், செய்வினைக் கட்டுகள், கடன்தொல்லை, பிரச்சினைகள், கஷ்டங்கள், குடும்பத்தில் நிலவும் சமாதானக் குறைவு, சந்தோஷக் குறைவு எல்லாத்லேயிருந்தும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒரு விடுதலையை கொடுப்பார். **இது மத மாற்றம் அல்ல. மன மாற்றம் மட்டுமே.** பாவசிந்தனையிலிருந்து மன மாற்றம். பாவ பழக்க வழக்கத்திலிருந்து ஒரு விடுதலை. நித்திய ஜீவனுக்கு (சொர்க்கம்) போய்சேர. இம்மைக்கும் மறுமைக்கும் அவரே தெய்வம்.

அவர் பேசும் தெய்வம். அவரிடம் சரணடைந்து பாவ மன்னிப்பை பெற்று சகல ஆசீர்வாதங்களையும் நீங்களும் உங்கள் குடும்பத்தில் உள்ளவர்களும் பெற்றுக் கொள்ளுங்கள். இந்த புஸ்தகத்தைப் படிக்கிற நீங்க, இதை உங்கள் இனத்தார், ஜனத்தாரிடமும், நண்பர்களிடமும், உறவினர்களிடமும், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடமும் படிக்கிறதுக்கு குடுங்க. ஜெபத்தோட குடுங்க. குடுத்த பிறகும் ஜெபம் பண்ணுங்க.

இந்த நூலுக்கு ஒய்வே இல்லாதபடிக்கு குறைஞ்சது 20 பேராவது படிக்க கொடுங்க. **'மனம் திரும்புகின்ற ஒரே ஒரு பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்குமே'** என்று வேதம் கூறுகிறது. நம்ம தேசத்தில இருக்கிற ஒருத்தரும் கெட்டு நரகத்துக்கு போகக் கூடாது. உயிரோடு இருக்கும் போதும் சந்தோஷத்தோட, சமாதானத்தோட, ஆரோக்கியத்தோட, சகல ஆசீர்வாதங்களையும் பெற்று வாழணும். இந்த வாழ்க்கைக்கு பிறகு இருக்கிற மறுமையிலும் சொர்க்கத்தில ஆண்டவரோட இருக்கணும். அதுக்கு ஒரே வழி. **'நானே வழியும் சத்தியமும் ஜீவனும்'** என்று சொன்ன இயேசு கிறிஸ்துதான். நீங்க இந்துன்னா இந்துவாவே இருங்க. முஸ்லிம்னா முஸ்லிம்மாவே இருங்க. ஆனா இயேசுவின் உபதேசத்தின்படி அவரை முழுமையா உங்கள் இருதயத்தில் ஏத்துண்டு பாவத்துக்கு விலகி பரிசுத்தமா வாழுங்க.

நீங்க எதிர்பார்க்கிற நன்மைகள், விடுதலை, ஆசீர்வாதம், அற்புத சுகம் உங்களுக்கு கிடைக்கும்.

எங்களோட சாட்சி அடங்கிய DVDயை நாங்க வெளியிட்டபோது காஞ்சிபுரத்தில் ஊழியம் செய்கிற ஒரு சகோதரர் இதை வாங்கினார். அவர் சொன்ன சாட்சி, ஒரு சகோதாரி குடும்பத்தில ஏற்பட்ட பிரச்சனையினால விவாகரத்துக்கு விண்ணப்பம் செய்ய இருந்தாளாம். அவர் கிட்ட இந்த சாட்சி DVDயை குடுத்தப்ப அதை பார்த்த அந்த சகோதாரி மனசுமாறி விவாகரத்துக்கு விண்ணப்பம் செய்யறதை விட்டுட்டு அவர் கணவரோடு சேர்ந்து குடும்பம் நடத்தும்படியாய் ஆண்டவர் அவர்கள் வாழ்க்கையில கிரியை செஞ்சார்.

DVD–யின் மூலம் நடந்த அற்புதம்

சென்னை பள்ளிக்கரணையில வசிக்கும் தமிழரசின்ற சகோதாரி இதைப் பார்த்தப்ப பல வருஷமாய் இருந்துவந்த வயித்துவலி மறைஞ்சதுன்னும், 15 வருஷத்துக்கு முன்னாடி உறவே வேண்டாம்னு சண்டை போட்டு பிரிஞ்சிருந்த அவளோட அண்ணன் அன்னைக்கே திரும்பி வந்தான்னு கர்த்தர் அவங்க வாழ்க்கையில செஞ்ச அற்புதத்தை சொன்னாங்க.

அதனால் இந்த DVDயை அநேகருக்கு வாங்கி கொடுப்பதை ஊழியமாக செஞ்சுண்டு வரா. அவங்க இருக்கும் வீட்டுக்கு பக்கத்தில வசிக்கும் ஒரு குடும்பத்தில கணவன் மனைவி எப்போதும் சண்டை போட்டுண்டே இருப்பாங்களாம். அந்த சகோதாரி தற்கொலை செஞ்சுக்கற மனநிலையில இருந்தப்ப இந்த DVDயை தமிழரசி கொண்டுபோய் அவங்களுக்கு குடுத்தா. அதை போட்டுப்பார்த்தப்ப ஆண்டவர் இயேசு அவர்களுடைய இருதயத்ல இருந்த தற்கொலை எண்ணத்தையே மாத்தினதுமில்லாம இன்னிக்கு அவங்க இரண்டுபேரும் ரொம்ப

சந்தோஷமா... தே...
உள்ள சபைக்கு
வாழறாங்க. இ இருக்காங்க. அவங்க வீட்டுக்கு பக்கத்தில
சேர்ந்திருக்காங்கக்குப்போய் ஞானஸ்நானம் எடுத்து சாட்சியாய்
இதேமாதிரி அநேக குடும்பங்கள் அந்த திருச்சபைல
இருதய நோய் ...காங்கன்னு சாட்சி சொன்னாங்க.

பல்லாவரத்தில் சுகமானது
சகோதரிக்கு
டாக்டர்கிட்ட ...த்தில் இருக்கும் திருமதி. ஆனி வெர்ஜீனியான்ற
சொன்னார். ... திடீர்னு நெஞ்சுவலி வந்தது. அவா குடும்ப
இருக்கு. அத... போனப்ப எக்கோ டெஸ்ட் (Eco Test) எடுக்க
அவர்கிட்ட ... எடுத்தவுடன் உங்களுக்கு இருதயத்தில் பிரச்சினை
நல்லதுன்னு ... அதனால நான் ஒரு டாக்டரை அறிமுகப்படுத்தறேன்.
என்ற டெஸ்ட் ...போய் நீங்க தொடர்ந்து சிகிச்சை எடுக்கறதுதான்
... சொன்னார். அந்த டாக்டர் டிரெட் மில் (tread mill)
பார்த்தப்ப உண்மை எடுக்கச் சொன்னர். அந்த டெஸ்ட் எடுத்து
இருக்குன்னு உண்மையாவே உங்களுக்கு இருதயத்தில பிரச்சினை
(angio) பண்ணி உறுதியாயிடுத்து. அதனால நீங்க ஆஞ்சியோ
சொன்னார். அன்னிக்கணும். கொஞ்சம் கிரிடிகல் கண்டிஷன்தான்னு
வீடே துக்கவீடு அவங்க வீட்டுக்கு வந்து இந்த விஷயத்தை சொன்னப்ப
வாடிப்போய் ... வீடு மாதிரி ஆயிடுத்து. எல்லாரோட முகமும் ரொம்ப
உடனே அவ... நாளைக்கு என்ன நடக்குமோன்னு ஒரே வேதனை.
ஏ.எல். நா... அவா இந்தியாவிலேயே நம்பர்ஒன் இருதயநோய் டாக்டர்
அவரும் ...எல். நாராயணனிடம் நேரம் கேட்டு வாங்கிண்டுபோய் பார்த்தா.
அவரும் ஆஞ்சியோ (angio) கட்டாயம்னு சொல்லிட்டார்.



அப்போ என் கணவரிடத்தில் இந்த விஷயமெல்லாம் சொல்லி ஜெபிக்கச் சொன்னா. எங்களுக்கு அந்த குடும்பம் ரொம்ப வருஷமா அறிமுகமானதனால என் கணவர் சொன்னார் 'உங்களுக்கு ஒண்ணும் ஆகாது. நான் ஒரு நாள் உபவாசம் இருந்து உங்களுக்காக ஜெபிக்கிறேன்'னார். அப்படி ஜெபிச்சுட்டு அந்த வீட்டுக்குப்போய் அவங்க தலையில கைவெச்சு ஜெபம் பண்ணினார். ஆண்டவர் இயேசுவிடம் மன்றாடி இந்த மகளுக்கு எதுவும் நேரிடக்கூடாது. நீங்க ஒரு அற்புதம் செய்யுங்கன்னு ஜெபிச்சுட்டு நீ போய் ஆஞ்சியோ (angio) எடுத்துப்பார். இயேசு சுகம் குடுத்துட்டார்னு சொன்னார். அப்படியே அவங்களும் ஆண்டவரை நோக்கி ஜெபம் பண்ணிட்டு அந்த டெஸ்ட் எடுத்தப்ப எல்லாமே நார்மல்னு ரிஸல்ட் வந்தது. அந்த டாக்டர் சொன்னாராம் உங்க கடவுள்தான் உங்களைக் காப்பாத்தியிருக்கார். எனக்கே ரொம்ப ஆச்சர்யமா இருக்குன்னு. ஆண்டவர் இயேசுவுக்கே மகிமை.

அதிசயமானவர்

என் மகன் விஜய் +2ல (12ஆம் வகுப்பு) 92% மார்க் வாங்க கர்த்தர் கிருபை செஞ்சார். அவன் மேல CA படிக்க ஆசைப்பட்டான். அதுக்கு நுழைவு தேர்வு எழுத தினமும் காலையில 'கோச்சிங் கிளாஸ் (coaching class) போறேன். ஆதனால நான் வீட்டிலிருந்தே (correspondence) B.com படிச்சுக் கிறேன்னு சொன்னான். அதனால நாங்க எந்த கல்லூரியிலேயும் அவனை சேர்க்க விண்ணப்ப படிவம் (application) வாங்கலை. ஜுன் மாசம் 12ஆம் தேதி 2011 அன்னிக்கு சாயந்தரம் அவன் எங்ககிட்ட வந்து என்னை காலேஜ்ல சேர்த்துடுங்க. என் கூட படிக்கிற எல்லாரும் காலேஜ்ல சேர்ந்துட்டா. என்னை விட குறைஞ்ச மார்க் வாங்கினவன் சொல்றான், ஏண்டா! நானே காலேஜ்ல சேர்ந்துட்டேன். ஆனா நீ ஏன் இன்னும் சேரலைன்னு கேக்கறான். எனக்கும் காலேஜ்

போக ஆசையா இருக்கு. அதனால நான் காத்தால CA Class போறேன். சாயங்காலம் காலேஜ் போறேன்னு சொன்னான். அந்த நேரத்தில எல்லா கல்லூரியிலேயும் சேர்க்கை (admission) முடிஞ்சு காலேஜ் திறந்தாச்சு. நாங்க சென்னை தாம்பரம் கிறிஸ்டியன் காலேஜ்லேயும் நுங்கம்பாக்கம் லயோலா காலேஜ்லேயும் இடம் கிடைக்குமான்னு முயற்சி பண்ணினோம். எதுவுமே முடியலை. நாங்க யாரையாவது சிபாரிசு பிடிச்சு அவனை சேர்த்துடலாம்னு நினைச்சு சில முக்கியமான பதவியில இருக்கிறவங்களை அணுகினோம். அவா நாங்க கண்டிப்பா வாங்கித் தருகிறோம்னு சொல்லி நாட்களை கடத்திட்டா. அப்புறம் நாங்க அவாகிட்ட காலேஜ் திறந்தே 12 நாட்கள் ஆயிடுத்து. நீங்க இன்னும் எதுவுமே சொல்லாம இருக்கீங்களேன்னு கேட்டோம். அதுக்கு அவா நாங்க எவ்வளவோ முயற்சி எடுத்தும் நீங்க ஒரு அப்ளிகேஷன் கூட வாங்காததினாலே எங்களால ஒண்ணும் பண்ண முடியலன்னு கை விரிச்சிட்டா. நாங்க மனுஷங்களை நம்பி ஏமாந்து போனோம்.

அம்மா அப்படின்னா நான் காலேஜ்ல சேரவே முடியாதான்னு ரொம்ப வருத்தத்தோட என் பிள்ளை கேட்டான். என் மனசு ரொம்ப பாரமாயிடுத்து. நம்ம பிள்ளை இவ்வளவு மார்க் வாங்கியும் நம்மால அவனைக் காலேஜ்ல சேர்க்க முடியலையேன்னு ரொம்ப அழுதேன். உடனே ஆண்டவராகிய இயேசுகிட்ட முறையிட்டேன். ஆண்டவரே நாங்க மனுஷங்களை நம்பி அவங்க பின்னால போயி ஏமாந்துட்டோம். காலேஜ் திறந்து 15 நாள் மேல ஆன இந்த நிலைமையிலே எங்களுக்கு உதவி செய்ய முடியும்னா அது உங்களால மட்டும் தான் முடியும்னு சொல்லி ஜெபிச்சேன். அதோட கூட இந்த சாட்சி புஸ்தகத்திலே என் ஆண்டவர் என் மகனுக்கு ஒரு அற்புதம் செய்து காலேஜ்ல சீட் வாங்கி குடுத்தார்னு எழுதுவேன்னு சொல்லி ஒரு பொருத்தனையும் பண்ணினேன்.

உடனே ஒரு பேப்பரை எடுத்து ஆண்டவர் என் மகனுக்கு கல்லூரியிலே இடம் வாங்கி குடுத்துட்டார்னு இப்ப நீங்க படிக்கிற இந்த சாட்சியை கல்லூரியில இடம் கிடைக்கிறதுக்கு முன்னாடியே எழுதிட்டேன். ஆண்டவரால முடியாதது எதுவுமேயில்லைன்னு நூற்றுக்கு நூறு நாங்க நம்பினோம். நாங்க குடும்பமாய் சேர்ந்து காலேஜ்ல இடம் வாங்கி குடுத்ததுக்காக உமக்கு நன்றி ஆண்டவரேன்னு ஜெபித்தோம். கடைசியா நாங்க ஜெபிச்சுட்டு சென்னையிலே மீனம்பாக்கத்திலுள்ள A M Jain கல்லூரியிலே

போய் சீட்டு இருக்கான்னு விசாரித்தோம். அங்கே காலேஜ் திறந்தே இரண்டு வாரம் ஆச்சுன்னு சொன்னா. அப்போ மூணே மூணு சீட்டு பிரின்சிபாலோட கோட்டாவில இருந்தது. அதிலே இரண்டு பேரை ஏற்கெனவே சேர்த்தாச்சு. இன்னும் ஒண்ணே ஒண்ணுதான் இருக்கு. ஆனா அதுக்கு இங்கே நாலு பேர் ஏற்கெனவே வெயிட் பண்றாங்கன்னு அந்தக் கல்லூரியின் சேர்க்கை அதிகாரி சொல்லிட்டார். அப்புறம் இங்கே இருக்கிற உங்க அஞ்சுபேர்ல யார் அதிகமா மார்க் வாங்கியிருக்காங்களோ அவங்களுக்குதான் இந்த சீட்டுன்னார். நாங்க ஆண்டவரே அது எங்களுக்கே கிடைக்க உதவி பண்ணுங்கன்னு ஜெபிச்சோம். என்ன ஆச்சர்யம் தெரியுமா! அதுல என் மகன்தான் அதிக மார்க் எடுத்திருந்தான். உடனே அவர்கள் என் மகனுக்கு நாங்க கேட்ட படியே B.com படிக்க இடம் கொடுத்தாங்க. மற்ற எல்லாரையும் வேறவேற படிப்பில சேர்ந்துக்கோங்க்ன்னு சொல்லிட்டாங்க. நாங்க சந்தோஷமா 28.6.2011 அன்று எங்கள் மகனுக்கு பீஸ் (fees) கட்டி காலேஜ்ல சேர்த்துட்டோம். எத்தனை ஆச்சர்யம் பாருங்க! ஆண்டவர் எங்கள் விசுவாசத்தை பார்த்து என் மகனுக்கு ஆயத்தம் பண்ணின காலேஜ்ல ஒருத்தர் தயவும் இல்லாம சீட் வாங்கி கொடுத்தார். "அவர் செய்ய நினைத்ததை ஒருவராலும் தடை செய்ய முடியாது". இதே மாதிரி இந்தப் புஸ்தகத்தை படிக்கிற உங்களுக்கும் ஆண்டவா; நீங்கள் எதிர்பார்த்திருக்கும் இடத்திலே விருப்பமான படிப்பு கிடைக்க உதவி செய்வார். நீங்க செய்ய வேண்டியது ஒண்ணே ஒண்ணுதான். ஆண்டவரை உறுதியா பிடிச்சுண்டு ஜெபிங்க. அற்புதத்தை பெற்றுக் கொள்வீங்க.

உங்களுக்கு உதவும் என் அனுபவங்கள்

இந்த புஸ்தகத்தை படிச்ச பின்னாடி நீங்களும் கூட நாம ஏன் இயேசுகிட்ட நம்மளோட கஷ்டங்களுக்காக, தேவைகளுக்காக, விருப்பங்களுக்காக, பிரச்சினை களுக்காக ஜெபிக்கக்கூடாதுன்னு நினைக்கலாம். நீங்க நினைக்கறது சரி. நான் உங்களுக்கு ஒரு இரகசியத்தை சொல்றேன்: இயேசு கிறிஸ்துவிடம் பாரபட்சமே கிடையாது. யார் கஷ்டத்தோட இருந்துண்டு அவரை கூப்பிட்டாலும் உடனே பதில் கொடுப்பார். அவாளோட குலத்தையோ கோத்திரத்தையோ அவர் பார்க்க மாட்டார். அவா ஏழ்மை நிலையிலிருந்தாலும், கடன் பிரச்சினையிலே மாட்டிண்டு இருந்தாலும், இதுவரைக்கும் அவருக்கு எதிரா

பேசிகிட்டிருந்தாலும் அவர் அதைப் பொருட்படுத்த மாட்டார். இவ என்னை இதுவரைக்கும் வழிபடலையே, ஏன் இவளுக்கு உதவி செய்யணும்னு நினைக்கமாட்டார். அதனால நீங்க தைரியமா இயேசுகிட்ட என்ன தேவைன்னாலும் நம்பிக்கையோட கேட்கலாம். அவர் இது என்னால முடியாதுன்னு சொல்லவே மாட்டார்.

இயேசு கிறிஸ்து கிட்ட வேண்டிக்கிறதனால நாம பூ வைக்கக் கூடாது, பொட்டு வைக்கக்கூடாது, தாலியை கழட்டணும்கிறது இல்லை. இது மதமாற்றமல்ல, மன மாற்றம் மட்டுமே. பாவ வாழ்க்கை, பாவ சிந்தனையில இருந்து மனமாற்றம். நாம செய்ய வேண்டியதெல்லாம் இதுவரைக்கும் செஞ்ச பாவங்களை எந்த மனுஷர் கிட்டேயும் இல்ல, அந்த பகவான் இயேசு கிறிஸ்து கிட்ட மனசை திறந்து நான் செஞ்சதை எல்லாம் மன்னிச்சிடுங்கோன்னு கண்ணீர் விட்டுக் கதறி கொட்டறதுதான். நாம பாவமே பண்ணலைன்னு ஒருத்தரும் சொல்லவே முடியாது. நீங்க கண்ணை மூடிண்டு இயேசுகிட்ட கேளுங்க. நான் என்ன தப்பு பண்ணினேன்னு தெரியல. என் கஷ்டத்துக்கு ஒரு விடிவு காலம் வரணும். எனக்கு நிம்மதி வேணும். என் தலையெழுத்தை மாத்துங்க. நான் உங்களை நம்பறேன். அதுக்கு நான் என்ன பண்ணணும்னு கேளுங்க.

நான் முதல்ல அவர்கிட்ட பிரார்த்தனை பண்றப்போ நினைச்சேன்: நம்மை அவருக்கு தெரியுமோ தெரியாதோ? நாம சொல்றதை அவர் கேட்பாரோ மாட்டாரோன்னு. என்னா நான் அது வரைக்கும்

விக்கிரகத்தைத்தானே வணங்கிண்டு இருந்தேன். அப்போதான் என் தங்கை சொன்னா் இந்த உலகத்தையே படைச்சது இயேசுதாண்டி. படைச்சவரை விட்டுட்டு அவர் படைப்புகளான சூரியனையும், சந்திரனையும், நட்சத்திரங்களையும், காத்தையும், நெருப்பையும் நீ வணங்கிண்டிருக்கியே? படைச்சவரை நீ வேறும்னா நினைக்காம, தெரிஞ்சிக்காம இருந்திருக்கலாம். ஆனா, அவர் உன்னையும் என்னையும் நம்ம அம்மா வயித்தில நாம உருவாகரத்துக்கு முன்னாடியே தெரிஞ்சிண்டிருக்கார். அதனால நீ தைரியமா பயப்படாம அவர்கிட்ட கேளு. அவர் உன் ஆத்துக்காரரை நல்லவரா மாத்தி உன்கிட்ட சேர்த்து வைப்பார்னு சொன்னா.

நான் இயேசுகிட்ட பிரார்த்தனை பண்ணினேன்னா, நம்மாத்து பக்கத்திலே இருக்கிறவா, நம்ம சொந்தக்காரா எல்லாரும் நம்பளப்பத்தி என்ன நினைச்சுப்பாளோன்னு எனக்கு தோனித்து. அதைப் பார்த்தோம்னா அவாளால நமக்கு எத்தனை நாள் உதவி பண்ண முடியும். எல்லாருக்கும் குடும்பம் குடுத்தனம்னு இருக்கே. அவா அதப்பார்ப்பாளா நம்பளப் பார்ப்பாளான்னும் தோனித்து. நமக்கு உடம்புக்கு முடியலைன்னா நாமதானே மருந்து சாப்பிடணும். நம்ம பிரச்சினை தீரணும்னா நாமதான் முயற்சி பண்ணணும். நாம நம்ம குடும்பத்தோட சேர்ந்து சந்தோஷமா இருந்தா அதை பார்த்துட்டு எல்லா சொந்தக்காராளும் இவளுக்கு ஒரு விடிவுகாலம்

வந்துடுத்துன்னு சந்தோஷமா இருப்பாளே. நம்மளால பண்ண முடியாத காரியத்தை ஒருத்தர் பண்ணியிருக்கார்னு இயேசுவை புகழ்வாளே தவிர குத்தம் சொல்லமாட்டா. அதோடகூட நாம எத்தனை நாளைக்கு இன்னொருத்தர் தயவில வாழமுடியும் சொல்லுங்கோ? நான் ஒரு தீர்மானம் பண்ணினேன். அதனால நான் இயேசுகிட்ட பிரார்த்தனை பண்ண ஆரம்பிச்சேன். அந்நிலேருந்து என் வாழ்க்கைல சமாதானமும், சந்தோஷமும் வர ஆரம்பிச்சது. சந்தோஷத்துக்கு அர்த்தமே நான் இயேசுவை மனசார ஏத்துண்டதுக்கப்புரம் தான் கிடைச்சது. இன்னிக்கு எங்க கடன் எல்லாம் அடைஞ்சு மத்தவாளுக்கு குடுக்கர அளவுக்கு வாழ்க்கைல போன நிம்மதி திரும்ப கிடைச்சு ரொம்ப சந்தோஷமா இருக்கோம்.

நீங்களும் இன்னிக்கு ஒரு தீர்மானம் எடுங்கோ. நாம சந்தோஷமா இருந்தாத்தான் அடுத்தவாளுக்கு உதவ முடியும். நான் அன்னிக்கு இயேசுகிட்ட போகலைன்னா கண்டிப்பா என் ஆத்துக்காரரோடவும் குழந்தைகளோடவும் சேர்ந்து இப்போ உங்களோட சந்தோஷமா பேசிண்டிருக்கமாட்டேனே? அதனால அடுத்தவாளை நினைச்சு உங்க வாழ்க்கையின் சந்தோஷத்தை நீங்களே கெடுத்துக்காதேள்னு சொல்றேன். இயேசுவைப் பத்தி நன்னா தெரிஞ்சுக்கோங்க. அதுக்கப்புறம் தண்ணீர்ல மூழ்கி ஜலதீட்சை (ஞானஸ்நானம்); எடுங்கோ. வைகுண்டம் போற வழியைதான் சொல்றேன். அங்க போறதுக்கு இயேசு தான் ஒரே வழி.

இன்னும் ஏதாவது சந்தேகம் இருந்தா நேர்ல வாங்கோ. இல்லே ஒரு போன் அடிங்கோ. நீங்க நன்னா ஷேமமா இருக்கணும் கிறதுக்காக சொல்றேன். வேற எதுக்காகவும் இல்லை. ஆண்டவர் இயேசு உங்களை ஆசிர்வதிப்பாராக! ஆமென்!

Rev. V. ராஜா
எண். 6, 6வது தெரு
2வது மாடி, ரங்கா நகர்
குரோம்பேட்டை
சென்னை-600 044

Rev. V. RAJA
No. 6, 6th Street
2nd Floor, Ranga Nagar
Chrompet
Chennai - 600 044

Mobile : 9840368166, 7200018166
E-mail rajasministries@rediffmail.com
E-mail : rajasministries@gmail.com